மாலை 46 மணி 10 அக்டோபர் 2004 விலை ரூ.10

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு

தீரா நோய் தீர்த்தருளும் நூபுர கங்கை

நவராத்திரி மகிமை

-டாக்டர் பத்மாசுப்பிரமணியம் சிறப்புக் கட்டுரை

எம்பெருமானார் இராமானுஜர்

- ஏ.எம்.ஆர். கட்டுரை

இந்து மதம் உணர்த்தும் குருவின் தனிச்சிறப்பு

-பாலகுமாரன் கட்டுரை

S.சந்திரன் செட்டியார்

குமார்ஸ் செராமிக்ஸ்
KHUMAR'S CERAMICS

Showroom : No.77/258, Goodshed Street,
Madurai 625 001.
© : **0452 - 5377639, 2341299**

Head Office : No. 232, East Veli Street,
Madurai - 625 001.
© : **0452 - 5546639, 2323639, Fax : 0452 - 5371639**

SOMANY WALL & FLOOR TILES

Kajaria

PAVIT VITRIFIED PAVEMENT

italia glass mosaic

NAVEEN DIAMONTILE

EUROCON TILES

BOSS PROFILES LTD.

VITREOUS HINDWARE

Ezar Bathroom Fittings & Accessories

Bell WALL & FLOOR TILES

CASCADE ATMOR Instant water heater

REGENCY CERAMIC TILES

SUMAN LUSTER TILES

e-mail : kcmdu@sify.com

Phone :
Admn. Office : (0452) 2620154, 2625466
Central Office : (0452) 2640880
Fax : (0452) 2640880

Jessi Publications

48/40, North ChithraiStreet, Madurai - 625 001.

Educational Books for Sharp Wisdom & Broad Knowledge

School textbooks on all subjects prepared with profound knowledge and the highest quality in accordance with the latest Matriculation, SCRET, CBSE, ISC and ICSC Syllabus.Out books are suitable for all English Medium Schools in India. They are suitable for all Matriculation Schools in Tamilnadu.

Samba Stationers

A variety of pupil's notebooks and handbooks are manufactured at the highest quality and are available at all time.

திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2035 தாரண – ஐப்பசி
மாலை–46 மணி –10 அக்டோபர் 2004

அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

"அம்பிகையைச் சரண் அடைந்தால் அதிக வரம் பெறலாம்"
என்றார் மகாகவி பாரதியார். ஆதிபராசக்தி அவதாரம் செய்து, மகிசனை வதைத்த வைபவம் ஆண்டுதோறும் "நவராத்திரி விழா"வாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

கண்கவரும் "காஞ்சி ஸ்ரீ காமாட்சி அம்மன்" இவ்விதழ் முகப்பை அலங்கரிப்பதோடு, நவராத்திரியைச் சிறப்பிக்கும் டாக்டர் பத்மா சுப்பிரமணியம் அவர்களின் "நவராத்திரி மகிமை" கட்டுரையும் இவ்விதழின் சிறப்பம்சமாகும்.

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என ஜீவகாருண்ய ஒழுக்கத்தை வலியுறுத்திய அருட்பிரகாச வள்ளலாரும், "அஹிம்சை"க் கொள்கையால் இவ்வையத்தை வாழ்விக்க வந்த மகாத்மா காந்தியடிகளும் தோன்றிய மாதம் இம்மாதம் ஆகும்.

இம் மகான்களைச் சிறப்பிக்கும் "வள்ளலார் உபதேசங்கள்" "மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயிலுக்கு மகாத்மா வருகை" படைப்புகளும் இவ்விதழை அலங்கரிக்கின்றன.

"மதுராந்தகம் அருள்மிகு ஏரிகாத்த இராமர்" திருக்கோயில் தலவரலாறு பற்றிய சுவையான செய்திகளும், மதுரை அழகர்கோயில் நூபுரகங்கையைப் பற்றிய சிறப்புக்கட்டுரையும் இவ்விதழின் சிறப்புஅம்சம் எனலாம்.

இராமானுஜரின் சிறப்பை எடுத்துக் கூறும் ஏ.எம்.ஆர். அவர்களின் "எம்பெருமான் என்னும் பெருஞ்செல்வத்தை மீட்டு அளித்த எம்பெருமானார்" கட்டுரை அனைவரும் பயில வேண்டிய அரிய கட்டுரை.

"இந்துமதம் உணர்த்தும் குருவின் தனிச்சிறப்பு" எழுத்தாளர் பாலகுமாரன் அவர்களின் கவின்மிகு படைப்பு.

இவற்றுடன் வழக்கமான நீதிக்கதைகள், சுவையான கேள்வி - பதில்கள், இலக்கிய நயமிக்க அரியபல செய்திகள்யாவும் நிச்சயம் உங்களைக் கவரும் என நம்புகிறேன்.

அனைத்தையும் படியுங்கள். உங்கள் எண்ணங்களை எங்களுக்கு எழுதுங்கள். உங்கள் விமர்சனம் எங்களை மேலும் ஊக்கப்படுத்தும்.

அன்புடன்,

[ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.]
ஆணையர்,
இந்து சமயஅறநிலைய ஆட்சித்துறை

119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை-600 034.

இதழின் உள்ளே...

		பக்கம்
1.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அன்னதானத் திட்டத்திற்கு மூன்று மாதச் சம்பளம் நன்கொடை	2
2.	அறநிலையத் துறை ஆற்றிவரும் அறப்பணிகள் - திருமிகு ஜி. இராமகிருஷ்ணன் இ.ஆ.ப.	3
3..	பக்தரில் சிறந்த அதிபத்தர்	5
4.	மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலுக்கு மகாத்மா காந்தியடிகளின் வருகை	6
5.	மதுரைத்தலங்களும் தேவாரமும் - முனைவர் கு. திருஞானசம்பந்தன்	7
6.	திருவிளையாடல்புராணம் - இரா. அரங்கசாமி	9
7.	இந்துமதம் உணர்த்தும் குருவின் தனிச்சிறப்பு - பாலகுமாரன்	11
8.	வள்ளல் இராமபிரான் வாலியை மறைந்து நின்று கொன்றதேன்?	14
9.	நவராத்திரி மகிமை - டாக்டர் பத்மா சுப்பிரமணியம்	17
10.	மதுராந்தகம் ஏரிகாத்தராமர்	20
11.	எம்பெருமான் என்னும் பெருஞ்செல்வத்தை மீட்டு அளித்த எம்பெருமானார் - ஏ.எம்.ஆர்.	22
12.	மகாபாரதம் - முனைவர் த. அமிர்தலிங்கம்	26
13	திருமந்திரஉபதேசம் - திருமந்திரச்செம்மல் டி.வி. வெங்கட்ராமன் இ.ஆ.ப. (ஓய்வு)	29
14.	கேள்வி-பதில் - டாக்டர் ஜீ. சீனிவாச சாஸ்திரிகள்	31
15.	அன்னாபிஷேகச் சிறப்பு	32
16.	விநாயகரும் சனீஸ்வரனும்	34
17.	ஆஞ்சநேயரும் சனீஸ்வரனும்	35
18.	வள்ளலார் உபதேசங்கள்	36
19.	கண்கொடுத்த கண்ணப்பரைப் புகழும் திருப்புகழ் - மு. அருணகிரி	37
20.	தீராநோய் தீர்த்தருளும் நூபுரகங்கை - பா. பாரதி பி.எல்.	38

மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் அன்னதானத் திட்டத்திற்கு மூன்று மாதச் சம்பளம் நன்கொடை

மாண்புமிகு தமிழ்நாடு முதல்அமைச்சர் அவர்கள் திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தை 23.03.02 அன்று தொடங்கி வைத்தார்கள். அது முதல் தம் ஒவ்வொரு மாதச் சம்பளத்தையும் திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கென வழங்கி வருகிறார்கள்.

இவ்வாண்டு மே மாதத்திற்கு உரிய தம் சம்பளம் ரூபாய் பத்தாயிரத்தை மதுரை மாவட்டம் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலுக்கும், ஜூன் மாதத்திற்கு உரிய சம்பளத்தை சென்னை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலுக்கும், ஜூலை மாதத்திற்குரிய சம்பளத்தைக் கடலூர் மாவட்டம், திருப்பாதிரிப்புலியூர் அருள்மிகு வீர ஆஞ்சநேயசுவாமித் திருக்கோயிலுக்கும் 7.9.2004 அன்று வழங்கினார்கள்.

அருள்மிகு கள்ளழகர் திருக்கோவிலின் துணை ஆணையர் மற்றும் செயல் அலுவலர் திருமதி பி. பாரதி, அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலின் துணைஆணையர் மற்றும் செயல் அலுவலர் திருமதி என் திருமகள், திருப்பாதிரிப்புலியூர் அருள்மிகு வீரஆஞ்சநேய சுவாமித் திருக்கோயில் செயல் அலுவலர் திரு எ. கிருஷ்ணகுமார் ஆகியோர் மாண்புமிகு தமிழ்நாடு முதல்அமைச்சர் அவர்களிடம் நேரில் வந்து அன்னதான நன்கொடையைப் பெற்றுக் கொண்டார்கள்.

★★★

வள்ளலார் வலியுறுத்திய அறம்



அருட்பிரகாச வள்ளலார் அறிவுறுத்திய அறங்களில் தலை சிறந்த அறம் அடியவர் பசிதீர்த்தல் ஆகிய அன்னதான அறமே ஆகும். அடியவர்க்கு அமுதளிக்க அவர் 1867 இல் தொடங்கிவைத்த "சத்திய தருமச் சாலை"யின் அடுப்பு இன்றுவரை தினமும் அணையாமல் அடியார்களின் பசியைத் தணித்து வருகின்றது.

தல வரலாறு மற்றும் தலபுராணம் :

திருக்கோயில்களின் சிறப்புகள், பெருமைகள், வரலாற்று முக்கியத்துவங்கள், கல்வெட்டுச்செய்திகள் மற்றும் புராண வரலாறுகள் ஆகியவற்றை மக்கள் அறியும் வண்ணம் திருகோயில்களின் தலவரலாறுகள் மற்றும் தலபுராணங்கள் அறநிலையத் துறையில் வெளியிடப் படுகின்றன.

அறநிலையத் துறை ஆற்றிவரும் அறப்பணிகள்

- திருமிகு ஜி. இராமகிருஷ்ணன் இ.ஆ.ப.
ஆணையாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

இதுவரை 1960 தலவரலாறுகளும், 9 தலபுராணங்களும், 2 பிள்ளைத் தமிழ் மற்றும் 2 கலம்பக நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் தலவரலாறு மற்றும் தலபுராண நூல்களை வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2003-2004ஆம் ஆண்டு 739 தலவரலாறுகள் வெளியிடப்பட்டுள்ளன. மாவட்டம்தோறும் முக்கிய திருக்கோயில் விவரம் அறிய பயணியர் கையேடு நூல்கள் வெளியிடப் பட்டு வருகின்றன.

ஆகமம் மற்றும் இதர நூல்கள் தமிழில் வெளியிடுதல்

(i) வடமொழியில் உள்ள ஆகம சாஸ்திரங்களைத் தமிழில் அறியும் வண்ணம் முதற்கட்டமாக **"உத்தரகாமிக ஆகம நூல்"** தமிழில் மொழிபெயர்ப்பு செய்து வெளியிடப்பட்டது. பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் இந்நூல் மறுபதிப்பு செய்யப்பட்டு வெளியிட நடவடிக்கையில் உள்ளது.

(ii) **"ஆலய நிர்மாண பிம்பலட்சண சிற்பநூல்"** தமிழில் வெளியிடப்பட்டுள்ளது.

(iii) கிராமப் பூசாரிகள் வழிபாட்டு முறைகளை அறிந்துகொள்ளும் வண்ணமும், தமிழில் வழிபாடு செய்வதற்கு ஏதுவாகவும் **"பூசாரிகள் வழிபாட்டு பயிற்சி நூல்"** தமிழில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(iv) **'குமார தந்திரம்'** என்னும் நூல் தமிழில் வெளியிட ஏதுவாக அச்சிடும் பணி நடைபெற்று வருகிறது.

(v) **"இந்துமத இணைப்பு விளக்கம்"** எனும் நூல் மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டுள்ளது.

(vi) **"சைவமும் வைணவமும்"** எனும் நூல் மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டுள்ளது.

புத்தொளிப் பயிற்சித் திட்டம் :

திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியர்கள் மற்றும் ஓதுவார்கள் ஆகியோர்கள் தங்கள்

திருக்கோயில்
திங்கள் இதழ்

சந்தா விவரம்

தனி இதழின் விலை	- ரூ	10/-
ஓராண்டுச் சந்தா	- ரூ	120/-
பத்து ஆண்டுச் சந்தா	- ரூ	1000/-
ஆயுட்காலச் சந்தா	- ரூ	1500/-

(ஆயுட்காலம்என்பது அதிகபட்சமாக 15ஆண்டுகள்மட்டும்)

விளம்பரக் கட்டண விவரம்

1.	பின் பக்க அட்டை வெளிபுறம் (வண்ணத்தில்)	ரூ. 25,000/-
1.	முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்)	ரூ. 12,000/-
2.	பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்)	ரூ. 10,000/-
3.	உள்புறம் முழுப்பக்கம்	ரூ. 5,000/-
4.	உள்புறம் அரைப்பக்கம்	ரூ. 3,000/-

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை, சென்னை-600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

நாகையில் அதிபத்த நாயனார் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் மாண்புமிகு சட்ட அமைச்சர் திருமிகு ஜெயகுமார் அவர்களும், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்களும், ஆணையாளர் திருமிகு ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.,அவர்களும், அறநிலையத்துறை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

பணிகளைத் திறம்படச் செய்ய ஏதுவாக 1991ஆம் ஆண்டு "புத்தொளிப்பயிற்சித் திட்டம்" தொடங்கப்பட்டுச் செம்மையுடன் நடைபெற்று வந்தது. கடந்த ஆண்டுகளில் தொய்வு ஏற்பட்டதை நிவர்த்தி செய்து இத்திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்க முடிவு செய்யப்பட்டது. புத்தொளிப் பயிற்சித் திட்டம் ஒவ்வொரு உதவி ஆணையர் பிரிவிலும் முக்கிய திருக்கோயில்களைத் தெரிவு செய்து நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2002-2003ம் ஆண்டில் மாநிலம் முழுவதும் பல்வேறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2002-2003ம் ஆண்டில் மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் 3 மாதப் புத்தொளிப்பயிற்சித் திட்டம், 54 திருக்கோயில்களில் அளிக்கப்பட்டது. 2.3.2003 முதல் 23 திருக்கோயில்களில் புத்தொளிப்பயிற்சி துவங்கப்பட்டு நடைபெற்றது.

திருக்கோயில்களில் நாதசுர இசைப் பணியாளர்கள் நியமனம்

நிதிவசதி இல்லாத காரணத்தால் நாதஸ்வர இசை பல பாடல்பெற்ற மற்றும் மங்களாசாசனம் செய்யப்பெற்ற வரலாற்றுப் புகழ் வாய்ந்த பழமையான திருக்கோயில்களில் கால பூஜை மற்றும் திருவிழாக்களின்போது இசைக்கப்படுவது குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு நாதசுரம், தவில் மற்றும் தாள இசைக் கலைஞர்களை நியமனம் செய்து முறையே ரூ. 1,500/-, ரூ. 1000/- மற்றும் ரூ. 750/- வீதம் மாத ஊதியம் துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென ரூபாய் ஒரு கோடி மூலதனம் முதலீடு செய்யப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை மூலம் மாத ஊதியம் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் நாதசுரம் - 6, தவில் 4, தாளம் 1 ஆக 11 நபர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

தமிழ்ப் புலவர்கள் நியமனம் :

நிதிவசதி மிக்க திருக்கோயில்களில் திருமுறை, திவ்வியபிரபந்தங்கள் பாடுதல், முற்றோதல் செய்தல், சொற்பொழிவுகள் செய்தல், சமயக் கருத்துக்களைப் பரப்புதல், தலவரலாறு, தல புராணம் வெளியிட நடவடிக்கை எடுத்தல் மற்றும் நூல் நிலையம் பராமரித்தல் ஆகிய பணிகளுக்காக 150 தமிழ்ப் புலவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அப்புலவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 1500/- ஊதியமாகத் திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

தொடர்ந்து வரும் ....

தலமரங்களின் அரசன்

தலமரங்களின் அரசன் அரசமரம் ஆகும்.
இதுவும் சிவலிங்கம் போன்று
மதிக்கப்படுகின்றது.
அரசமரத்தின் அடிப்பகுதி பிரம்மா,
அரசமரத்தின் நடுப்பகுதி திருமால்,
அரசமரத்தின் மேற்பகுதி உருத்திரன்,
அரச மரத்தை வணங்கினால் மும்மூர்த்தி
களையும் வழிபட்ட பலன் கிடைக்கும்.

பக்தியில் சிறந்த அதிபத்தர்

அருள்மிகு ஆதிபுராணர் என்னும் திருநாகைக் காரோணர் உடனுறை நீலாயதாட்சி அம்மன் திருக்கோயில், அமைந்துள்ள நாகப்பட்டினத்தின் கடற்கரையின் அருகே நுளைப்பாடி எனும் நம்பியார் நகர். மீனவர் கிராமத்தில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டுக்கு முன்னால், அதிபத்தர் என்னும் பெரியார் ஒருவர் தோன்றினார்.

திருநாகைக் காரோண சுவாமி உடனுறை கருந்தடங்கண்ணி அம்மை திருவடிகளுக்கு அவர் தொண்டு புரிபவர். மீனவ குலத்திற்கு தலைவர். பல கட்டுமரப் படகுகளை கடல் மேல் செலுத்திப் பெருவலை வளைத்துக் கரையில் இழுத்து பலவகை மீன்களைப் பிடித்துக் குவிக்கும் பலவகை மீன் குவியல்கள் அளவில்லாதன பெற்று பெருஞ்செல்வராய்ச் சிறப்புற வாழ்ந்து வந்தார்.

அதிபத்தர் அதிகாலையில் நாகை ஆதிபுராணரை மனதில் தியானித்து பெருவலையைக் கடலில் செலுத்திச் செல்வார். பெருவலை கரையில் வந்து சேர்ந்த உடன் அதில் அகப்பட்ட முதன்மையான ஒரு மீனை இரு கைகளாலும் வாங்கி "இது அருட்கூத்து ஆடும் பெருமானுக்கு ஆகுக" என்று இடையறாத அன்பினாலேயே கடலிலேயே விட்டு விடுவார்.

பெருவலையில் ஒரு நாள் ஒரே ஒரு மீனே அகப்படினும் அந்த ஒரு மீனையும் சிவபெருமானின் திருவடிக்கு என்று கடலில் விட்டு கடல் நீரை அள்ளி நீர் மாந்தி இரு கைகளையும் தலைமேல் குவித்து வணங்குவார். அநேக நாட்கள் தொடர்ந்து அவருக்கு தினந்தோறும் ஒவ்வொரு மீனே கடலில் கிடைக்க அந்த ஒவ்வொரு மீனையும் திருநாகை ஆதிபுராணர்க்கென்று சென்று கடலிலேயே விட்டு வந்தார். இதனால் அதிபத்தர் வருவாய் குன்றிச் செல்வம் குறைந்தது. அவருடைய அரிய சுற்றத்தார் உணவின்றிப் பசியால் வாடினார்கள்.

அதிபத்தரோ வருந்தாமல் கிடைத்த ஒரு மீனையும் சிவபெருமானுடைய திருவடிக்கே உரியது என்று கடலிலேயே விட்டு மகிழந்தார். அநேக நாட்கள் இப்படியே நிகழ்ந்தன. அதிபத்தருக்கும் உணவின்றித் திருமேனி தளர்ச்சியடைந்தது. ஆயினும் அவர் தமது திருத்தொண்டின் செயலைச் சிறிதும் தளராமல் அன்புடன் நிறைவேற்றி வந்தார். அச்செயலின் திறத்தை ஆலமுண்ட காரோண பெருமான் அறிந்து அதிபத்த நாயனாரின் அன்பெனும் திருவமுதை உண்டு வந்தார்.

இவ்வாறு நிகழும் நாள் ஒன்றிலே இறைவன் அந்த ஓர் மீனும் அங்கு அகப்படாதொழியச் செய்து அதற்கு மாறாக மிக அதிசயமான மீன் ஒன்று வலையில் அகப்படும்படி செய்தார். உலகம் முழுவதையும் விலையாக மதிக்கப்படும் தன்மையில் பொன்மயமாய்ப் பேரொளி வீசும் நவமணிகளாகிய உறுப்புகளைக் கொண்டு அந்த மீன் அதி அற்புதமாக விளங்கியது.

மீன் வாரி இழுக்கப்பட்ட பெருவலை கடற்கரையில் வந்து ஏற அதனுள் அகப்பட்ட அதிசய மீன் காலை கதிரவன் உதயமானாற் போல் உலகமெல்லாம் வியக்கும்படி பேரொளி வீசியது. அந்த மீனை மீனவர்கள் எடுத்து வந்து அதிபத்தரிடம் கொடுத்தார்கள்.

ஒரு மீன் பிடித்தோம் என்றார்கள். அதிபத்தர் அதை வாங்கி நவமணி பொழிந்த இம்மீன் "என்னை ஆளுடைய சிவபெருமானுக்கே ஆகும்; அவரது பொற்கழல்கள் சென்று சேர்க" என்று கூறி அதைத் திரைக்கடலில் சுழற்றி வீசினார். எல்லா உலகும் பொருளையே விரும்பும். அத்தகைய வலிமையான பொருள் பற்றை அதிபத்தர் அறவே நீக்கியவராக விளங்கினார். அவர் முன்பு சிவபெருமாள் விடைமேல் ஏறி விண்ணில் காட்சி அளித்தார். தேவர்கள் கற்பக மலர் மழையை பொலிந்தனர். ஐவகை இசைக்கருவிகள் ஆகாயத்தில் ஒலித்தன. அது கண்ட அதிபத்த நாயனார் ஆனந்த கண்ணீர் மல்க நிலமுற வீழ்ந்து வணங்கி, எழுந்து, இரு கைகளையும் சிரமேல் கூப்பி நின்றார். சிவபெருமான் அவருக்குச் சிவலோகத்தில் அடியார்களுடன் சேர்ந்து இருக்கும்படி திருவருள் வழங்கினார்.

★★★

காலச்சுவடுகள்



மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலுக்கு மகாத்மா காந்தியடிகளின் வருகை

26.03.1919 - 28.03.1919 ஆகிய தினங்களில் காந்தியடிகள் முதன் முதலாக மதுரை நகருக்கு வருகைபுரிந்தார்.

20.09.1921, 22.09.1921 ஆகிய தினங்களில் காந்தியடிகள் இரண்டாவது முறையாக மதுரை நகருக்கு வருகை புரிந்த போது அதுவரை அவர் அணிந்திருந்த நவநாகரிக உடைகளை விடுத்து நாட்டில் உள்ள ஏழை எளியவர்கள் போல் எளிமையான கதர் ஆடை அணிந்தார். இந்நிகழ்வு மதுரை மேல மாசி வீதியில் நடைபெற்றது.

1927 ஆண்டு செப்டம்பர் *28, 29, 30* தினங்களில் மதுரை நகருக்கு வருகை புரிந்தார்.

1934 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் *25, 26, 27* ஆகிய தினங்களில் நான்காவது முறையாக காந்தியடிகள் மதுரைக்கு வருகை புரிந்தார்.

ஐந்தாவது முறையாக **1946** ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் **2**-ஆம் தேதி வருகை புரிந்தார். இப்பயணத்தில்தான் அவர் முதன்முதலாக மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு வருகை புரிந்தார். திருக்கோயில் நிர்வாகத்தின் சார்பில் அவருக்கு பூரண கும்ப மரியாதை செய்யப்பட்டது. அரைமணி நேரத்திற்கும் மேலாக திருக்கோயிலில் உள்ள மண்டபங்களையும், சிற்பங்களையும் கண்டு மகிழ்ந்தார். மேலும் திருக்கோயிலில் அவர் தியானமும் செய்தார்.

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் அம்மன் சன்னதி நுழைவு வாயிலான அஷ்டசக்தி மண்டபத்தில் **1923**ஆம் ஆண்டு வரையப்பட்ட ஓவியங்களில் ஒன்றான மீனாட்சி பட்டாபிஷேக ஓவியத்தில், ஓவியர் சுப்பா நாயுடு அவர்கள் மீனாட்சி பட்டாபிஷேகத்தின் போது உள்ள முனிவர்கள், தேவர்களுடன், மகாத்மா காந்தியும் உடன் இருப்பது போல் ஓவியம் தீட்டினாார். ஆங்கில அரசு இதற்கு எதிர்ப்பு தெரிவிக்க காந்தியடிகள் உருவத்தில் தாடி மற்றும் சடாமுடி ஆகியவற்றை காலக்கிரமத்தில் மறையக் கூடிய வண்ணகலவை சேர்த்து முனிவர் போல் மாற்றியமைக்கப்பட்டது. அவர் எண்ணியவாறே மூன்று மாதங்களுக்குப் பிறகு அவ்வோவியத்தில் காந்தியடிகள் உருவத்தின் மீது வரையப்பட்டிருந்த சடாமுடி மற்றும் தாடி முதலியன மறைந்து காந்தியடிகளின் நிஜமான தோற்றம் தெளிவாக தெரிந்தது. இப்போதும் மீனாட்சி பட்டாபிஷேக ஓவியத்தில் காந்தியடிகளின் இத்தகைய காட்சியைக் காணலாம்.

★★★

டாக்டர் கு.ஞானசம்பந்தன்
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை-9.

மதுரைத் தலங்களும் தேவாரமும்

ஒருமுறை முதுகலை வகுப்பில் திருஞானசம்பந்தர் பாடிய தேவாரப் பதிகங்களுக்குப் பொருள் கூறிப் பாடம் நடத்திக் கொண்டிருந்தேன்.

அப்போது ஒரு மாணவர் எழுந்து 'ஐயா, திருஞானசம்பந்தர் வாழ்ந்த காலம் ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது ஏழாம் நூற்றாண்டு என்று கூறினீர்கள். 1400 ஆண்டுகளுக்கு முன்பு அவர் வாழ்ந்ததற்கான சான்றாதாரங்கள் ஏதாவது உண்டா?" எனக் கேட்டார். எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது.

"தம்பி நல்ல கேள்வி கேட்டாய். ஒருவர் வாழ்ந்தார் என்பதற்குப் பல சான்றாதாரங்கள் உண்டு.

அவர் செய்த அருஞ்செயல்கள்
நிகழ்த்திய சாதனைகள்
அவர் வந்து சென்ற இடங்கள்
அவர் பயன்படுத்திய மொழி - இவை இன்றைக்கும் நாம் காணுமாறு இருப்பது தான் சிறப்பு எனலாம்" என்றேன்.

"அத்தகைய சிறப்பு ஏதேனும் ஒன்றைச் சொல்லுங்களேன்" என்றான் மாணவன்.

"திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற தலங்கள் தமிழகம் முழுவதும் உண்டு. நாம் இருக்கும் மதுரைக்கு அருகில் திருஞானசம்பந்தருக்கு எனத் தனியாக கோவில் அமைந்த ஊர் ஒன்று உண்டு. அது எந்த ஊர் தெரியுமா?" என்று கேட்டேன்.

வகுப்பு முழுவதும் அமைதியாக இருந்தது. யாரும் பதில் சொல்லவில்லை. பிறகு நானே தொடங்கினேன், "சாமநத்தம்" என்று ஒரு ஊர் மதுரைக்குத் தெற்கே 8 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது, தெரியுமா, என்றேன். மாணவன் ஒருவன் எழுந்து, "ஐயா, அது எங்கள் ஊர் தான்" என்றான். நான் மகிழ்ச்சியோடு "அந்த ஊருக்கு உண்மையான பெயர் 'சாம்பல்நத்தம்' என்பது தான்" என்று சொல்லி "அக்காலத்தில் கூன்பாண்டியன் மதுரையை ஆண்டபோது சமண மதம் மதுரையில் மேலோங்கியிருந்தது, சைவ மதத்தைப் பின்பற்றுவோர் தண்டிக்கப்பட்டார்கள். இதை மாற்றக் கூன்பாண்டியனின் மனைவியும் பாண்டிய அரசியுமான மங்கையர்க்கரசியும், அமைச்சராகிய குலச்சிறையாரும் இறையருள் பெற்ற திருஞானசம்பந்தரைச் சோழநாட்டிலிருந்து மதுரைக்கு வரவழைத்தார்கள்.........."

மாணவர்கள் ஆர்வமாகக் கேட்கத் தொடங்கினர்.

வந்த திருஞானசம்பந்தருக்கும், மதுரையிலிருந்த சமணர்களுக்கும் அனல் வாதம், புனல்வாதம் எனப் போட்டி ஏற்பட்டது. அதற்குள் ஒரு மாணவன் எழுந்து, "ஐயா, அனல் வாதம், புனல் வாதம் என்றால் என்ன?" என்று கேட்டான். "போட்டியாளர்கள் தங்கள் கொள்கைகளை ஏட்டில் எழுதி நெருப்பில் இடுவார்கள். நெருப்பில் கருகாத ஏடே சிறந்த கொள்கையுடையது. அவரே வெற்றி பெற்றவர் என்பது முடிவு. இதற்கு அனல்வாதம் என்று பெயர்.

இதே போல ஏட்டினில் பாட்டினை எழுதி வைகையாற்றில் இடுவார்கள். ஆற்றோடு போன ஏடு தோற்றோருடையது, எதிர்த்துச் சென்ற ஏடு வெற்றியடைந்த ஏடு - இது புனல்வாதம். சமணர்கள் ஏடு

அனல்வாதத்திலும் புனல்வாதத்திலும் பயனற்றுப் போனது. ஞானசம்பந்தர் தேவாரம் எழுதி இட்ட ஏடு நெருப்பில் ஒளிர்ந்தது, நீரில் எதிர்த்துச் சென்றது. வென்றது.

அவ்வாறு திருஞானசம்பந்தரின் ஏடு ஆற்றில் எதிர்த்துச் சென்று கரை சேர்ந்த இடம் எது தெரியுமா? திருஏடகம். அதுதான் இன்று சோழவந்தான் அருகில் உள்ள திருவேடகம் என்ற ஊர்.

"ஐயா, அது எங்க ஊர் ஐயா" என்று ஒரு மாணவன் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான். 'அப்படியா? அதில் எழுதிய பாட்டு உனக்குத் தெரியுமா?' என்றேன் 'தெரியும் ஐயா' என்று சொல்லி

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே"

என அத்தேவாரப் பாடலையும் எடுத்துச் சொன்னான் மாணவன்.

'ஐயா, எங்க ஊரை மறந்துட்டீங்களே' என்றான் சாம்பல்நத்தத்துக்காரன்.

"மறக்கவில்லை, இப்படி அனல் வாதம், புனல்வாதப் போட்டியிலே தோற்ற ஆயிரத்திற்கும் மேற்பட்ட சமணர்கள் கழுமரத்தில் ஏறித் தங்களை மாய்த்துக் கொண்ட இடம் தான் 'சாமநத்தம்'. அவர்களுடைய உடல்களை எரியூட்டியதால் சாம்பல் மலைபோல் குவிந்ததாம். அதனால் சாம்பல்நத்தம், பிறகு காலப்போக்கில் சாமநத்தம் ஆனது. இந்த நிகழ்ச்சியை மக்களுக்கு உணர்த்தத் திருஞான சம்பந்தருக்கு இவ்வூரில் கோவில் அமைக்கப்பட்டது" என்று நான் சொல்லி முடித்தேன்.

அதற்குள் ஒரு மாணவன், "ஐயா, சமணர்களின் ஏடு ஆற்றோடு அடித்துக் கொண்டு போனதாகச் சொன்னீர்கள், அவர்கள் எழுதிய பாட்டு ஆத்தோடு போய் விட்டதா?" என்று குறும்பாகக் கேட்டான்.

"நல்ல கேள்வி கேட்டாய், அப்படிச் சமணர்கள் எழுதிய பாட்டுக்கள் (பாக்கள்) சேர்ந்த இடம் தான் மதுரைக்குக் கிழக்கே 'திருப்பாச்சேத்தி' என்று நான் சொன்னவுடன்,

"ஐயா, அது எங்கள் ஊர்தான் ஐயா" என்று மகிழ்வோடு ஒரு மாணவன் எழுந்து சொன்னான்.

"இன்னும் கேளுங்கள், திருஞானசம்பந்தர் வந்து சென்று அருட்செயல்கள் நிகழ்த்திய இடங்களைப் பற்றிப் பார்த்தோம். அவரது தேவாரப்பாடலில் பயன்படுத்திய ஒரு சொல் இன்றைக்கும் மதுரை மாவட்டத்தில் பழக்கத்தில் உள்ளது தெரியுமா?"

"அது என்ன சொல் ஐயா?" என்று ஒரு மாணவன் கேட்டான்.

மதுரையில் இருக்கிற திருஞானசம்பந்தர் மடம்; இந்த மடத்தில் அன்றைக்கு திருஞானசம்பந்தர் தங்கி இருந்த போது, சமணர்கள் இரவில் திருஞானசம்பந்தரைக் கொல்வதற்காக மடத்திற்குத் தீ வைத்தார்கள். ஆயினும், சிவனருள் பெற்ற, அம்பிகையிடத்தில் ஞானப்பால் அருந்திய திருஞானசம்பந்தரை அந்நெருப்பு நெருங்கவில்லை.

திருஞானசம்பந்தர், இதற்குக் காரணமாக இருந்தவர்கள் சமணர்கள் தான். அவர்களுக்குப் பின் இருந்தவன் பாண்டிய மன்னன் தான் என்பதை உணர்ந்து நெருப்பினை நோக்கி.

"பையவே சென்று பாண்டியர்க்கு ஆகவே"

எனப்பாட நெருப்பு வெப்பு 'நோயாக' மாறிப் பாண்டிய மன்னனைப் பற்றியது. பிறகு அவ்வெப்பு நோயையும்

'மந்திரமாவது நீறு, வானவர் மேலது நீறு' எனும் தேவாரம் பாடி ஞானசம்பந்தர் தீர்த்து வைத்தார் என்பது நமக்குத் தெரியும். இதில் "பையவே" என்ற சொல் மதுரையில் இன்றைக்கும் வழக்கில் உண்டு. இதற்கு "மெதுவாக" என்று பொருள். வேகமாக ஓடுகிற ஒருவனை 'பையப் போடா' என்றால் 'மெதுவாகப் போடா' என்று பொருள். இந்தச் சொல்லைத் தமிழகத்தில் மதுரைக்காரர்கள் மட்டுமே பயன்படுத்துகிறார்கள் என்பது நமக்குத் தெரிந்த ஒன்று தான் என்று சொல்லி முடித்தேன். ★★★

திருவிளையாடல் புராணம்

4. தடாதகைப் பிராட்டியார் திருஅவதாரப் படலம்

மலயத்துவச பாண்டியன் மனுநூலில் கூறியபடி சிறப்புடன் ஆட்சி புரிந்து வந்தான். சூரியகுலத்தில் தோன்றிய சூரசேனன் என்ற சோழனுடைய மகளான 'காஞ்சனமாலை' என்பவளை மணம் செய்து கொண்டான். மலயத்துவச பாண்டியன் மகப்பேறின்றிப் பல நாள் வருந்தினான். பின்னர் அசுவமேத யாகம் செய்யத் தொடங்கித் தொண்ணூற்றொன்பது யாகங்களைச் செய்தான்.

அப்போது இந்திரன், "இப்பாண்டியன் நூறாவது யாகத்தைச் செய்து முடிப்பானாயின், நொடிப்பொழுதிலே எனது பட்டம் மாறிவிடுமே" என்று கருதிப் பாண்டியனிடம் சென்று "நீ மகப்பேற்றை விரும்பினாய். அதனால் புத்திர காமேஷ்டியாகம் செய்வாய்" என்று கூறிவிட்டுத் தன்னுலகம் அடைந்தான். மலயத்துவச பாண்டியன் இந்திரனின் வேண்டுகோளின்படி புத்திரகாமேஷ்டி யாகம் செய்யத் தொடங்கினான்.

யாகத்தீயினை வளர்த்து ஆகுதி செய்தான். அப்போது வேள்விக் குண்டத்தில் இருந்து எல்லா உலகங்களையும், உயிர்களையும் பெற்றவளாகிய உமையம்மையார் மூன்று தனங்களையுடைய ஒரு பெண் மகவாக மூன்று வயது தோற்றத்துடன் தோன்றி எழுந்து வந்து நின்றார். தன் தாயாகிய காஞ்சனமாலையின் மடியில் போய் அமர்ந்தார்.

இதனைக் கண்டு மலயத்துவச பாண்டியன் துன்பம் அடைந்தான். தான் விரும்பியபடி ஆண்மகவாக இல்லாமல்தோன்றிய பெண் மூன்று தனங்களுடன் இருந்ததால் அவன் பெரிதும் வருந்தினான். அப்போது வானினின்று ஒரு திருவாக்கு "மன்னனே! உன் பெண் மகவுக்கு, புதல்வருக்குச் செய்வதுபோல் சடங்குகள் யாவும் செய்து 'தடாதகை' என்று பெயரிட்டு மூடி சூட்டக் கடவாய்! இப்பெண்ணுக்கு ஏற்ற கணவன் வரும்போது ஒரு தனம் தானே மறைந்துவிடும். ஆதலால் மனம் கலங்காதே" என்று எழுந்தது.

அந்த வானொலிச் செய்தியைக் கேட்ட மலயத்துவச பாண்டியன் பெரிதும் மகிழ்ந்தான். மகள் பிறந்த மகிழ்வை அரச முறைப்படி கொண்டாடி மகிழ்ந்தான். தடாதகைப் பிராட்டியார் மழலை மொழி பேசும் சிறுமியரோடு விளையாடினார். சிற்றில் கட்டினார். சிறுசோறு சமைத்தார். வேதம் முதலிய அறுபத்து நான்கு கலைகளையும் நன்முறையில் கற்றுத் தெளிந்தார். படைக்கலப் பயிற்சியில் வல்லவரானார். உரிய பருவம் வந்தடைந்தார்.

அதைக் கண்ட பாண்டியன் மகிழ்வடைந்து தன்னுடைய 'சுமதி' என்னும் அமைச்சரோடு கலந்தாலோசித்து பிராட்டியாருக்குத் திருமுடி சூட்டி மகிழ்ந்தான். சில நாட்களில் மலயத்துவசபாண்டியன் விண்ணுலகை அடைந்தான். தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிக்கடன்களைச் செய்து முடித்த பிராட்டியார் உலகமெல்லாம் ஒரு குடைக் கீழ்ச் சிறப்புற செய்தார்.

அவருடைய ஆட்சிக் காலத்தில் அறுபத்துநான்கு கலைகளும் சிறப்புற ஓங்கின. பூசைகள்

நியமப்படி நடைபெற்றன. தேவ உலகில் உள்ளவர்களும், மண்ணுலகில் உள்ளவர்களும் பிராட்டியாருக்குப் பணிவிடை புரிந்தனர். தடாதகைப் பிராட்டியார் கன்னிப் பருவத்தில் மூடி சூடி நாட்டை ஆண்டமையால் பாண்டிநாடு 'கன்னிநாடு' என்னும் பெயர் பெற்றது.

இச்செய்தியை அகத்தியமுனிவர் பிறமுனிவர்கட்குக் கூறி வந்தபோது, அம்முனிவர்கள், "பிராட்டியார் இறைவனினின்றும் தனித்துவந்து பூமியில் தோன்றக் காரணம் யாது? என்று கேட்டனர். அதைக் கேட்ட அகத்திய முனிவர் அதற்குரிய காரணத்தைக் கூறத் தொடங்கினார்.

விச்சுவாவசு என்னும் பெயருடைய வித்தியாதரனுக்கு "விச்சாவதி" என்னும் பெண் ஒருத்தி இருந்தாள். அவள் அம்பிகையிடம் மிக்க ஈடுபாடு கொண்டு அவளைத் துதிக்க எண்ணி, "உமையை வழிபடுவதற்கேற்ற சிறந்த தலம் யாது?" என்று தன் தந்தையிடம் கேட்டாள். அதற்கு விச்சுவாவசு "மதுரை என்னும் சிறப்பான பதியே அதற்கு ஏற்ற இடம்" என்று கூறினான். இதனைக் கேட்ட விச்சாவதி தந்தையிடம் விடை பெற்றுக் கொண்டு மதுரை நகரை அடைந்தார்.

ஆண்டு முழுவதும் பலவிதமான நோன்பியற்றித் தவம் புரிந்தாள். தை மாதத்தில் அங்கயற்கண்ணி அம்மையின் சந்நிதியை அடைந்து வணங்கினாள். யாழைக் கையில் எடுத்து இனிய இசையைப் பாடினாள். அப்போது மீனாட்சி அம்மையார் மூன்று வயதுடைய ஒரு பெண் குழந்தையாய் நேரே தோன்றி "விச்சாவதி! நீ யாது விரும்பினாய்?" என்று கேட்டார். விச்சாவதி, "தாயே! நினது திருவடித் தாமரைக் கண் என்றும் நீங்காத அன்பு வேண்டும்" என்றாள்.

உடனே அம்மையார், "இன்னும் வேண்டுவது யாது? சொல்!" என்றாள். உடனே விச்சாவதி "அம்மையே! இப்போது காட்சி தருகின்ற குழந்தை திருவுருவத்திலேயே அடியேனிடத்தில் தோன்றிக் கருணை கூர்ந்திருக்கும்படி திருவருள் புரிய வேண்டும்" என்று வேண்டினாள். உடனே மீனாட்சியம்மையார் அதற்கிசைந்து, "பாண்டியர் மரபிலே மலயத்துவசன் என்பவன் தோன்றுவான். நீ அவனுடைய மனைவியாய் வருவாய். அப்போது நாம் உம் தவப்புதல்வியாய் வருவோம்" என்று அருள் புரிந்தார். இதுவே மலயத்துவசனின் மகளாய்த் தடாதகைப் பிராட்டியார் தோன்றிய வரலாறு என்று அகத்திய முனிவர் கூறினார். (தொடரும்)

நன்றி : இராமலிங்கர் பணிமன்றம்
சென்னை.

★★★

மனைவிக்கு ஏன் அன்பு காட்டவேண்டும்?

தன் மனைவி அவர்கள் வீட்டில் எல்லோரையும் துறந்து புகுந்த வீட்டிற்கு வருகிறாள். ஆகவே புகுந்தவீடே தஞ்சமெனப் புகலிடம் கோரிவரும் மனைவிக்கு அன்புகாட்டி அரவணைக்க வேண்டுவது கணவனின் தலையாய கடமையாகும்.

- டாக்டர் திருமுருக
கிருபானந்தவாரியார் சுவாமிகள்

அரசும் வேம்பும்

அரசும், வேம்பும் இணைந்திருந்தால் இது
சிவமும் சக்தியும் இணைந்திருப்பதாகும்.
அரசமரமும், வேப்பமரமும் இணைந்திருக்க
வீற்றிருக்கும் பிள்ளையார் மகத்தான
சக்தி படைத்தவர் ஆவார்.
இவரை வலம் வந்து
வழிபட்டால் தீரா நோய்களும் தீரும்,
சேரா பிள்ளைவரமும் சேரும்.



பாலகுமாரன்



இந்து மதம் உணர்த்தும் குருவின் தனிச் சிறப்பு

இந்தியாவைத் தவிர உலகத்தின் எந்தப் பகுதியிலேயும் குரு என்கிற விஷயம் பற்றிப் பெரிய சிலாகிப்பு இருக்கிறதா என்ற கேள்வி எனக்குள் உண்டு. இல்லையோ என்ற எண்ணமும் உண்டு.

இந்துமதத் தத்துவத்தில் குரு என்கிற விஷயத்திற்கு மிக மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த குரு ஆச்சார்யன் அல்ல. பாடம் சொல்லிக் கொடுக்கிறவரோ, வித்தை சொல்லிக் கொடுக்கிறவரோ, பழக்க வழக்கங்கள் சொல்லிக் கொடுக்கிறவரோ அல்ல. மதபோதகரும் அல்ல. ஒரு மதத்தின் சட்டதிட்டங்களை ஆசார அனுஷ்டானங்களைச் சொல்லித்தருபவரும் அல்ல.

ஒரு குருவிற்கு தந்தைக்குண்டான ரத்தபாசம் கிடையாது. அவன் என் பிள்ளை அவன் தவறே செய்யக்கூடாது. தவறு செய்தால் அவனைக் கண்டிப்பதற்குத்தான் நான் இருக்கிறேன் என்ற முரட்டுத்தனம் ஒரு குரு காட்டுவதில்லை. பிரம்பால் விளர்சுவதோ, பேச்சுக்களை வகைதொகையின்றி வாரி இறைப்பதோ உணவு உண்ணும்போது "தண்டச்சோறு" என்று திட்டுவதோ அவருடைய வேலை அல்ல.

ஒரு தாயின் வெகுளித் தனமும் குருவிடம் கிடையாது. என் பிள்ளை என்ன செய்தாலும் என் பிள்ளைதானே! அவனை நான் பொறுத்துக் கொள்ளத்தானே வேண்டும்! அவன் திருடனாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளத்தானே வேண்டும் என்கிற அதீதமான நெகிழ்வும் குருவிடம் கிடையாது. ஒரு கணவனுக்கு உண்டான உரிமைபோல எந்தவிதமான உபயோகப்படுத்தலும் குருவுக்கு இல்லை. மனைவியைப்போல நீங்கள் பேசுவதெற்கெல்லாம் தலையாட்டுகிறவரும் அல்ல.

அப்படியானால் குரு சிநேகிதனா? இல்லை. அதற்கும் மேலே; சிநேகிதனிடம் கூட ஒரு பொறாமை இருக்கும். உங்களோடு ஒரு போட்டி இருக்கும். தனக்கு அடுத்தபடியே தன் தோழன் இருக்க வேண்டும் என்ற ஆவல் இருக்கும். நானே கதாநாயகன் என்ற மமதை இருக்கும். அதற்கான முனைப்புகள் இருக்கும்.

குரு அப்படிப்பட்டவரும் அல்ல. ஆமெனில், குரு எப்படிப்பட்டவர் என்ற ஒரு கேள்வி வருகிறது.

குரு என்பவர் ஒரு நேர்த்தியான மனிதர். கருணை என்றால் ஒரு வரம்புதான் இல்லையோ.

"குருவின் அருளுக்கொரு உவமைதான் சொல்லவோ" என்று ஒரு பாடல் உண்டு.

நேர்த்தியான மனிதர் என்பதற்கு ஒரு வரைமுறையே இல்லை. எல்லா இடத்திலும் செய்நேர்த்தியும், சொல் நேர்த்தியும், யோசிப்பு நேர்த்தியும், பழகு நேர்த்தியும் கொண்டவர் குரு. குறையே இல்லாதவர் குரு. உங்களுக்குக் குறையாகத் தென்பட்டதெல்லாம் பிறகு மிகப்பெரிய நிறையாக வெகு சீக்கிரமே தெரிய ஆரம்பித்துவிடும். அவரை மறுத்துப் பேசியதோ கீழ்ப்படிய மறுத்ததோ எத்தனை பெரிய முட்டாள்தனம் என்று வெகுசீக்கிரத்தில் நிரூபணம் ஆகும்.

குருவுக்கு மட்டும் இப்படிப்பட்ட ஒரு உயர்ந்த இடம் சொல்ல காரணம் என்ன? அப்படி அவரிடம் என்ன இருக்கிறது. என்ற கேள்விக்கு யார் குருவாக முடியும் என்கிற

சேலத்தில் சீரோங்கும் கோட்டை மாரியம்மன்

எட்டுப்பேட்டை கட்டியாளும் சேலம் கோட்டை மாரியம்மனுக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் பொங்கலிட்டு வழிபட்டார்கள்.

உபகேள்வியையும் போட்டுக் கொண்டால் பதில் கிடைப்பது எளிதாக முடியும்.

விருப்பு வெறுப்பு இல்லாமல் எவர் நடுநிலையில் இருக்கிறாரோ அவரே நேர்த்தியான மனிதராக முடியும். எது குறித்தும், எப்போதும் எந்த நிலையிலும் விருப்பு வெறுப்பற்று இருத்தல், யோசிக்கும் போதே, பிரச்சினைகளை அணுகுகின்ற போதே நடுநிலையில் நிற்றல். மதம் சார்ந்தோ, மொழி சார்ந்தோ, தேசம் சார்ந்தோ, கலாச்சாரம் சார்ந்தோ இல்லாதபோது நடுநிலையில் நிற்றல் என்றால் என்ன என்பது புரியும். இப்படி மொழிமதம் தேசம் சாராது எல்லோராலும் இருக்க முடியாது. அதற்கு மிகப்பெரிய நேசிப்புத் தேவை. சகல உயிர்களையும் நேசிக்கிறவர், இவைகளையெல்லாம் கடந்து வந்து நிற்பார்.

எவரும் எதிரியில்லா, எதுவும் எதிரியில்லா ஒரு நிலை வேண்டுமெனில் எதையும் சார்ந்திராத ஒரு தனிமை, ஒரு அமைதி ஒரு சந்தோஷம் மிக முக்கியம். அந்த சந்தோஷமான அமைதிதான் ஒருவரை குருவாக்குகிறது. சகலமும் அறிந்த ஒருவரைத் தெளிவாக்குகிறது. தெளிவானவர்தான் குருவாக உருவாக முடியும். ஏனெனில் அவர் எதையும் சாராதவர். எந்தப் பக்கமும் இல்லாதவர். எப்போதும் நடுநிலையில் நிற்பவர். எந்த உணர்வுகளுக்கும் ஆட்படாதவர். எந்தப் பாசப்பிடிப்பிலும் சிக்கித்தவிக்காதவர்.

"அவர் இளம் வயதில் மரணமடைந்து விட்டாரா என்ன செய்வது? நேற்று இருந்தவர் இன்று இல்லை என்ற சிறப்புத்தான் உலகத்தின் இயல்பு. அடுத்தபடியாக ஆக வேண்டியதை கவனிப்போமே."

"அடடே....... அவளுக்குக் குழந்தை பிறந்துவிட்டதா மிகவும் சந்தோஷம், பிறந்த குழந்தையின் மூலம் மகத்தான பணிகள் நிறைவேறட்டும், அன்பு பெருகட்டும். ஒரு வீட்டில் குழந்தை பிறந்தால் அந்த வீட்டில் அன்பு அதிகரிக்கிறது என்று அர்த்தம். அன்பு அதிகரிக்க வேண்டும். அன்புதான் சந்தோஷத்தின் வெளிப்பாடு. நம்முடைய இயல்பு இடையறாத சந்தோஷத்தை நாடுவதுதான். சந்தோஷத்தைத் தேடிதான் இத்தனை போட்டி பொறாமைகள். ஆட்டம் பாட்டம் எல்லாம்" என்று விளக்கிச் சொல்லுவார்.

இந்த உலகத்தினுடைய பிரமாண்டத்தை, இந்தப் பிரபஞ்சத்தினுடைய பிரமாண்டத்தை எல்லாக் கோள்களும் சரியாக அசைவதை, ஒழுங்காக நடப்பதை, சரியாக தினமும் காலையில் உதிப்பதை அஸ்தமிப்பதை நன்கு சுட்டெரிப்பதை 'மழை வருவதை' காற்று வீசவதை எல்லாம் பார்க்கும்போது ஏதோ ஒன்று இயக்குகிறது என்று தோன்றவில்லையா?"

அதற்கு என்ன பெயர் வைப்பது. எல்லாவற்றையும் கடந்த ஒரு சக்தி என்பதை

புரிந்து கொண்டு அதற்கு கடவுள் என்று பெயர் வைத்தார்கள்.

எது அது? என்ன உருவம் அது? என்ன தன்மை அது? என்ன வலிவு அது? அது எங்கிருந்து வந்தது? போன்ற கேள்விகள் உண்மையாக நீ இருப்பின் உனக்குள் எழும். அந்தக் கேள்விகளுக்கு பதில் நான் சொல்லி, நீ புரிந்துகொள்ள முடியாது. நீயாக அறிந்துகொள்ள வேண்டும்.

இதோ இந்தக் குடுவையிலிருந்து நான் தேன் குடித்து விட்டேன். தேன் மிகத் தித்திப்பாக இருக்கிறது. எவ்வளவு தித்திப்பாக இருக்கிறது? என்று என்னால் உன்னிடம் சொல்ல முடியவில்லை. அப்படிச் சொன்னாலும் உனக்கு அது புரியாது. நீ தேன் குடிக்கும் வரை உனக்கு அது தெரியாது. எனவே, என்னைத் தேன் எப்படியிருக்கிறது. என்று கேட்பதை விட்டுவிட்டு நீ குடி."

ஒரு உத்தமமான குருவின் சத்தியமான வார்த்தைகள் இவைகள். தேன் குடித்தல் என்பது கடவுளைத் தேடுதல் என்று வைத்துக்கொள்வோம், அறிதல் என்று வைத்துக் கொள்வோம்.

வெறும் கடவுள் தேடுதல் மட்டும் சொல்பவரா குரு? இல்லை. நடுநிலையில் நிற்பவரின் மனம் எப்பொழுதும் கருணையில் ஊறி நிற்கும். நாம் அருகே நிற்க அது நம் தலையைத் தொட நம்மை அணைத்துக்கொள்ள அதனுடைய கருணை நம்முடைய கருணையை ஊற வைக்கும். அவரோடு வெறுமே சுற்றி இருப்பதால் பார்ப்பதால், உட்கார்ந்து, பேசுவதால் நம்மையும் மீறி, நமக்குள் ஒரு மலர்ச்சி ஏற்படும். இதுதான் சொல்லாமல் சொல்லுதல். உன்னை மாற்றிவிடுகிறேன். உனக்கு தீட்சை கொடுக்கிறேன. உனக்கு புதுப்பெயர் சூட்டுகிறேன். என்றெல்லாம் பம்மாத்து செய்யாமல் எல்லாவற்றையும் கணக்குப் போட்டு காசு வாங்காமல், தன்னுள் இருப்பதை உன்னுள் கொட்டிவிட்டு தனியே அமர்ந்திருக்கின்ற மிகப்பெரிய உன்னதம் குரு .

குருவை அனுபவித்தவன். குருவாவதற்கு எந்த முயற்சியும் தேவையில்லை. எந்தத் தடங்கலும் வராது. இது இந்துமதம் உணர்த்தும் குருவின் தனிச் சிறப்பு.

★★★

வழிபாட்டில் நம்பிக்கை வேண்டும்

வேத விற்பன்னர் ஒருவருடைய வீட்டிற்குத் தினமும் பால்காரி காலையில் பால் கொண்டு வந்து கொடுப்பாள்.

சில நேரங்களில் காலையில் பால் கொண்டுவரக் காலதாமதம் ஆவது உண்டு.

"ஏன் தாமதம்?" என்று வேத விற்பன்னர் காரணம் கேட்க "காட்டாற்றில் சிலநேரம் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. வெள்ளம் தணிந்த பின் வருவதால் தாமதம் ஆகிறது" என்றாள் பால்காரி.

"ஓம் குருவே துணை" என்று குருவை வழிபட்டால் காட்டாறு உனக்கு வழிவிடுமே!" என்று ஆலோசனைகூறினார்.

அவர் சொன்ன குருமந்திரத்தைப் பரிபூரணமாக நம்பிய பால்காரி அவ்வாறே வெள்ளம் அதிகமாக ஓடிய நேரங்களில் "ஓம் குருவே துணை" என்று வழிபட்டுக் கிடுகிடுவென ஆற்றில் இறங்கி நடப்பாள். ஆறும் அவளுக்கு வழிவிட்டது.

தினமும் தாமதமின்றி வேத விற்பன்னருக்கும் பால் கிடைத்து வந்தது.

"எப்படித் தாமதமின்றி வருகிறாய்?" என்று ஒருநாள் விசாரித்தார் வேத விற்பன்னர்.

"ஓம் குருவே துணை" எனக் கூறி ஆற்றில் நடக்க ஆறு வழிவிடுவதாக அப்பால்காரி தெரிவித்தாள்.

அதிசயப்பட்ட வேதவிற்பன்னர் "எங்கே ஆற்றைக் கடந்து காட்டு" என்று கேட்டார். பால்காரி "ஓம் குருவே துணை" என்றவாறு ஆற்றைக் கடந்து அக்கரைக்குச் சென்று விட்டாள்.

வேத விற்பன்னரின் உதடுகள் "குருவே துணை" என்று முணுமுணுக்க, உள்ளத்தில் நம்பிக்கையின்றி கரையிலேயே வேட்டி நனையுமென்று வேட்டியை மடித்துக் கட்டியவாறு நின்றார். அவருக்கு ஆறு வழிவிடவில்லை.

நம்பிக்கையோடு வழிபட்டாலே
நல்லபலன் உண்டாகும் என்பது
இதனால் தெளிவாகின்றது அல்லவா!

வள்ளல் இராமபிரான்

வாலியை

தன் மனைவியை அபகரித்துச் சென்ற இராவணன்மேல் கருணைகாட்டி "இன்றுபோய் நாளை வா" எனக் கூறிய இராமபிரான், வாலியை ஏன் கொல்ல வேண்டும்? அதுவும் மறைந்து நின்று.

இராவணனைக் காட்டிலும் கொடியவன் வாலி.

இராவணன் சீதையை அபகரித்துச் சென்று அசோக வனத்தில் சிறையில்தான் வைத்தான்.

ஆனால் வாலியோ, தன் தம்பி சுக்ரீவன் மனைவியான ருமையை - தன் மகளாக எண்ணிக் காப்பாற்ற வேண்டியவளை மனைவியாகவே தீண்டி அனுபவித்து விட்டான்.

குரங்குகளில் தன் மனைவி, தம்பி மனைவி என்ற பாகுபாடெல்லாம் கிடையாது என்று வாதம் செய்யலாம்.

ஆனால் வாலியைச் சாதாரண குரங்காக எண்ணுதல் இயலாது.

வாலி தர்மசாத்திரம் படித்தவன், தினமும் தவறாமல் சிவ பூஜை செய்தவன்.

இராமபிரானிடம் வாலி இப்படிக் கேட்கின்றான். "அரக்கன் உன் மனைவியை எடுத்துச் சென்றால், அதற்கு ஒரு குரங்கைக் கொல்ல மனுதர்மசாத்திரம் கூறுகின்றதா?," இக்கேள்வியிலிருந்தே வாலி மனு தர்மசாத்திரம் முதலானவற்றைக் கற்று

மறைந்து நின்று கொன்றதேன்?

தேறியவன் - சாதாரண குரங்குஅல்ல என்பது தெளிவாகும்.

பிறன் மனைவியைத் தீண்டுவது கொடிய பாவம். அதிலும் தன் தம்பி உயிரோடு இருக்கும் போதே அவன் மனைவியைத் தன் மனைவியாக்கிக் கொண்ட வாலி மகாகொடியவன்.

இத்தகையவன் ஆற்றலைக் கண்டு இராமபிரான் அஞ்சவில்லை. "தீயாரைக் காண்பதும் தீதே" என்ற வாக்கியப்படி கொடியவனான வாலியைக் காணவே இராமபிரான் அஞ்சினார்.

மேலும் இராமபிரான் நேரில் வந்தால் கொடியவனான வாலி தன்னை மன்னித்து அருள்புரியுமாறு கருணை வள்ளலான இராமபிரானைச் சரணாகதி அடைந்து விடவும் கூடும்.

அவ்வாறு வாலி சரணாகதி அடையும் பட்சத்தில் இராமபிரான் சுக்ரீவனுக்கு அளித்த வாக்குறுதி நிறைவேறாமல் போய்விடும்.

ஆகவேதான் தருமத்தைக் காக்க வந்த இராமபிரான், கொடியவனான வாலியை மறைந்து நின்று கொன்றார் என்பது தெளிவு.

★★★

என்றும் பாசப்பிணைப்புடன்
நாவிற்கினிய நற்சுவைக்கு

ஹோட்டல் பிருந்தாவன்
6, கீழ ஆவணி மூல வீதி, மதுரை-1. போன்:5377666

ஹோட்டல் அமிர்தா
29&30, மேலக்கோபுர வாசல், மதுரை-1. போன்:2347289

ஹோட்டல் ஆதித்யா
118, கீழமாசி வீதி, மதுரை-1. போன்: 5372777

உங்கள் வருகையே எங்களின் உவகை...
உங்கள் வாழ்த்தே எங்களின் வளர்ச்சி...

உ
Sri Valaiguruswami Thunai




Kasiyanantha Industries

P.Box No. 2320, Old No. 88, New No. 37, NYNIAPPA NAICKEN STREET,
II FLOOR, PARK TOWN, CHENNAI - 600 003. Ph: 2535 4724 Fax: 2535 9159

IS : 1660 Part - 1

NON-STICK COOKWARE

Anantha

நவராத்திரி மகிமை

டாக்டர் பத்மா சுப்பிரமண்யம்
இயக்குநர் : நிருத்யோதயா, சென்னை

யா தேவி ஸர்வ பூதேஷ
சக்தி ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை
நமஸ் தஸ்யை நமோ நமஹ.

"எந்த தேவியானவள் எல்லா உயிரினங்களிலும் சக்தி ரூபமாய் திகழ்கிறாளோ அவளை வணங்குகிறேன், வணங்குகிறேன், தண்டமிட்டு வணங்குகிறேன்". இந்த வரிகள் தேவி மஹாத்மியம் என்றும், தேவி ஸப்தசதி என்றும் அழைக்கப்படும் ஸமஸ்க்ருத நூலில் காணப்படுகிறது.

700 பாடல்களை கொண்ட இந்நூல் பராசக்தியின் பராக்கிரமத்தை எடுத்துரைக்கிறது. மகாகாளி, மஹாலட்சுமி, மஹா சரஸ்வதி என்று அவள் எடுத்துக்கொண்ட அவதாரச் சிறப்பினை வர்ணிக்கிறது.

துர்க்கை, மஹிஷாசுரமர்த்தினி என்றெல்லாம் அன்னையை வீரசக்தியாக போற்றும் நூல் இது.

பாரதம் முழுவதும் துர்க்கை வழிபாடு இருந்து வந்துள்ளது. போர்க்களத்தில் கண்ணபிரான், தேரை எதிரிகளின் முன் நிறுத்தியவுடன், அர்ஜுனனை நோக்கி முதலில் துர்க்கையை வழிபடச் சொல்கிறான். அதற்கும் முந்திய அவதாரமான இராமனும் துர்க்கையை ஒன்பது இரவு வழிபட்டு, பின்பு இராவணனை ஸம்ஹாரம் செய்ததாகப் படிக்கிறோம்.

அந்தப் பத்தாவது நாளை ஜெயம் தந்த விஜய தசமியாக வடநாட்டவர் இராவணன் சிலையின் மீது அம்பெறிந்து கொண்டாடுவர். தென்னாட்டவரும் நவராத்திரியின் பொழுது சுந்தர காண்டம் பாராயணம் செய்வது வழக்கத்தில் இன்றும் உள்ளது.

துர்க்கையானவள் துஷ்டரைஅழித்து நல்லோரைக் காத்து அருள்பவள். அவள் வீரசக்தி. இந்து மதம் எல்லா தத்துவங்களையும் உருவகப்படுத்தியிருப்பது பெண் வடிவில்தான் எனலாம். செல்வம் லக்ஷ்மி என்றால், ஞானம் சரஸ்வதி மற்றும் வீரம் துர்க்கையாகிறாள். வாழ்க்கைக்குத் தேவையான இச்சை, கிரியை (செயல்), ஞானம் யாவற்றையும் பெண் தெய்வங்களாகவே வழிபடுகிறோம்.

இச்சை என்பது அறத்தைச் சார்ந்த இச்சையாக இருத்தல் வேண்டும். ஞானத்தில் தோய்ந்த இச்சையாக இருத்தல் வேண்டும். இந்த இச்சையை செய்முறையாக்குவதற்கு ஆற்றல் வேண்டும். அலை மகளை, கலை மகளை, மலை மகளை மூன்று குணங்களை, மூன்று பரிமாணங்களை மூன்று வகையில் பிரதிபலிக்கும் மூன்று சக்திகளாக வழிபடுகிறோம்.

நவராத்திரி பண்டிகையின் முதல் மூன்று இரவுகள் துர்க்கையையும், இரண்டாம் மூன்று இரவுகள் லக்ஷ்மியையும், இறுதி மூன்று இரவுகள் சரஸ்வதியையும் ஆவாஹனம் செய்து வழிபடல் வேண்டும்.

ஒரு குடத்தில் நீர் நிரப்பி, அந்த நீரில் வாசனை திரவியங்களான பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, ஏலக்காய் போன்றவற்றைக் கலந்து, பின் மாவிலை வைத்து, மஞ்சள் பூசப்பட்ட தேங்காயைக் குடத்தின் வாயை மூடும் அளவு மேலாக வைத்து அந்த தேங்காயின் குடுமி சற்றுப் பின்புறமாக சாய்வாக வைத்தல் வேண்டும்.

கும்பம் தயார் செய்து, பின்பு ஒரு மனையில் கோலமிட்டு அதன்மேல் நெல்லைப் பரப்பி, அதற்குமேல் வாழை இலை வைத்து, அதன்மேல் பச்சரிசி பரப்பி, அதன்மேல் கும்பத்தை வைக்க வேண்டும். பின்னர் இந்த கும்பத்திற்குப் புதிய வஸ்திரம் சாத்தி, மஞ்சள் குங்குமம் வைத்து,

ஆபரணங்களை அணிவித்து ஒன்பது நாளும் பூஜை செய்வது என்பது, ஒவ்வொரு இந்து வீட்டிலும் உலகெங்கிலும் செய்யப்பட்டு வரும் வழக்கமாக இருக்கிறது. ஆலயங்களில் விஷேச பூஜைகள் செய்வது போல மடங்களிலும், அவரவர் வீட்டிலும் விஷேச ஆராதனைகள் இன்றும் நடந்து வருகிறது. பாரதமெங்கும் நகரங்களிலும், நாட்டுப் புறங்களிலும் மற்றும் ஆதிவாசிகளின் காட்டுப் புறங்களிலும் நவராத்திரி பல்வேறு விதமாக கொண்டாடப்பட்டு வருகிறது. கலாச்சார நுணுக்கங்கள் வேறுபட்டாலும் தேவி வழிபாடு என்பது எல்லா மட்டத்திலும் பொதுவான அஸ்திவாரமாக விளங்கி வருகிறது எனலாம்.

தற்போது வங்காளத்தில் துர்க்கை பூஜை என்று நவராத்திரியின் கடைசி மூன்று நாட்கள் மட்டும் விமரிசையாகக் கொண்டாடி வருகிறார்கள். ஒவ்வொரு தெருவிலும், அந்தந்தத் தெருவில் உள்ளவர்கள் இணைந்து மிகப்பெரிய அருமையான துர்க்கையையும், லட்சுமி, சரஸ்வதி, முருகர், விநாயகர் என்று சிறிய உருவங்களையும் படைத்துக் கொலு வைத்து மூன்று நாள் பூஜைகள் நிகழ்த்தி, தசமி அன்று ஆற்றிலோ, கடலிலோ, குளத்திலோ கரைத்து விடுவார்கள். அந்த மூன்று நாட்களும் தேவி மஹாத்மியம் பாராயணம் நடைபெறும்.



தமிழகத்தில் இந்தப் பூஜைகளோடு படிப்படியாக பொம்மைகளை அலங்காரம் செய்து கொலு வைத்து கொண்டாடுவது வழக்கம். ஒவ்வொரு வீட்டிலும் பத்து நாளும் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், அழைக்கப்பட்டவர்கள், அழைக்கப்படாதவர்கள் என்ற பாகுபாடு இன்றி எல்லோருமே எல்லா வீட்டுக்கும் சென்று தாராளமாகப் பார்க்கலாம்.

பெண்களுக்குத் தாம்பூலம் கொடுப்பது மட்டுமல்லாமல் எல்லோருக்கும் சுண்டல் விநியோகம் நடக்கும்.

கொலுவின் அமைப்பு *3,5,7,9* என்று ஒற்றைப்படை முறையில் படிகள் அமைய வேண்டும். பொம்மைகள் தெய்வங்களையும், தேவர்களையும், மனிதர்களையும், மிருகங்களையும், பறவைகளையும், தாவரங்கள் சேதன - அசேதன பொருள்கள் யாவற்றையும் பிரதிபலிக்கும். தேவியை ஆவாகனம் செய்த கலசத்தோடு இந்த உலகப் படைப்பின் பிரதிநிதிகளாக இந்தப் பொம்மைகள் வைக்கப்படுகின்றன.

இந்து மதக் கலாச்சாரத்தில் சமயச்சார்பு இல்லாதவை என்று எதுவும் இல்லை. அதனால்தான் ரிக்ஷா வண்டியில் இருந்து இரயில், கார், தற்போதய கம்ப்யூட்டர் உட்பட கொலுவில் எல்லாமே இடம் பெறுகின்றன.

படைத்தவனும் படைப்பும் ஒன்றாகவே கருதப்படுவதால் வாழ்க்கை என்பது ஒரு மங்களகரமான நிகழ்வாகக் கருதப்படுகிறது. ஆகவேதான் வழிபாடு என்பது சாப்பாடு உட்பட ஒரு ஆன்மீகக் கேளிக்கையாகக் கருதப்படுகிறது. சமுதாய உணர்வோடு ஒன்றிப்போன விழாக்களில் ஒன்றுதான் நவராத்திரி விழா ஆகும்.

கிரியா சக்தியாக துர்க்கையும், இச்சா சக்தியாக லட்சுமியும் போற்றிவிட்டு, ஞானசக்திக்கு சரஸ்வதி பூஜை செய்யும் போது அதில் வேதாந்த தத்துவத்தோடு தற்போதய கம்யூனிசத் தத்துவமும் இணைந்து இருப்பதை உணரலாம்.

சரஸ்வதி பூஜையை மாஸ்கோவில் ஒரு முறை கொண்டாடினேன். என் நாட்டிய நிகழ்ச்சிக்கு **1968**-ல் சென்ற போது என் தந்தை இயக்குநர் கே. சுப்ரமண்யம் அவர்கள் எங்கள் நாட்டியக் குழுவின் தலைவராக வந்திருந்தார். அவர் ரஷ்ய விருது பெற்ற இந்திய சினிமா டைரக்டர். சென்னையில் இந்திய - சோவியத் கலாச்சார சங்கத்தின் ஸ்தாபகரும், தலைவருமாக இருந்தார்.

சரஸ்வதி பூஜை அன்று மாஸ்கோவில் நாங்கள் கொண்டு சென்ற இசைக்கருவிகள், சலங்கைகள் புத்தகங்கள் மற்றும் அந்த உணவு விடுதியில் இருந்து ஸ்குரு டிரைவர், ஸ்பேனர், காய்கறி வெட்டும்கத்தி எல்லாவற்றையும் சந்தனம், குங்குமம் தடவி நிறைய மலர்களால் அர்ச்சனை செய்து, பால், தயிர் வெண்ணை, அரிசி பொரிக்குப் பதிலாக சோளப் பொரி, மற்றும் பழங்கள் வைத்து நைவேத்தியம் செய்தோம்.

ரஷ்ய நண்பர்கள் பலர் வந்திருந்தனர். என்தந்தை அப்போது ஒரு சொற்பொழிவு ஆற்றினார். "நீங்கள் கம்யூனிச தத்துவத்தை நம்புபவர்கள் Dignity of Labour அதாவது தொழிலின் நன்மதிப்பைப் போற்றுபவர்கள். எங்கள் இந்து சமயம் இதைத்தான் நம்புகிறது. செய்யும் தொழிலே தெய்வம் என்று நாங்கள் நம்புகிறோம்.

கண்ணன் கீதையில் அவரவர் செய்யும் தொழிலை எனக்கு அர்ச்சனையாக

சமர்ப்பித்தால் போதும், அதுவே முக்திக்கு வழி என்று கூறுகிறான். தொழிலுக்கான கருவிகள் யாவும் செயலைக் குறிப்பிடுவதாகும். அவையாவும் கிரியா சக்தியின் சின்னங்களாகும். அவற்றை பயன்படுத்த அதற்கேற்ற கல்வி தேவையாகையால் சரஸ்வதியின் அருள் தேவையாகிறது. திறனும், செயலும் இணைந்து நின்றால் செல்வம் தானே வரும்.

ஆகவேதான் எங்கள் நாட்டில் ஒரு காரோட்டி காருக்கும், சைக்கிள் ஓட்டுபவன் சைக்கிளுக்கும், மாலை அணிவிப்பான்; ஏர் உழுபவன் ஏருக்குப்பூஜை செய்வான். ஆலைகளில் உள்ள ஒவ்வொரு இயந்திரத்திற்கும் பூஜை நடத்தப்படும். ஆகவே இன்று சங்கீதக் கருவிகளோடு தொழிலாளர்கள் சின்னமாக உள்ள ஸ்குருடிரைவர், ஸ்பேனர் வைத்து பூஜை செய்கிறோம். நீங்கள் அனைவரும் கலந்து கொள்ளுங்கள்" என்றார். அந்த ரஷ்யர்களை என் தந்தை கூறிய கருத்து மிகவும் கவர்ந்தது. அவர்களும் நம்மைப் போன்று அவர்களுடைய காலணிகளைக் கழட்டி விட்டு சரஸ்வதி பூஜையில் கலந்து கொண்டனர்.

தசமி என்பது வெற்றியைத் தரும் நாள். காஞ்சி காமாட்சி ஆலயத்தில் காமாட்சி அம்மன் அம்பு எய்யும் காட்சி மிக சிறப்பான உற்சவமாக கொண்டாடப்படும் போது அந்த தெருவில் ஓர் மூலையில் ஒதுங்கி நின்றுகொண்டு தருசித்த தெய்வத்தை அதாவது, மானிட உருவத்தில் இருந்த காஞ்சி மகாசாமிகளைத் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றவள் நான்.

தசமி அன்று குரு தரிசனம் செய்வது விசேஷம் . எப்பேர்பட்ட மேதாவியாக இருந்தாலும், எந்தத் தொழிலைச் சேர்ந்தவராக இருந்தாலும் விஜய தசமி அன்று அவரவர்கள் தம்மை அரிச்சுவடி மாணாக்கர்களாக எண்ணிக்கொண்டு அவரவர் தொழிலில் தம்மைப் பக்தியோடு ஈடுபடுத்தி கொள்ள வேண்டிய நாள்.

உதாரணமாக பெரிய பாடகர்கள் கூட முதல் பாடமான "ஸரிகமபதநி" பாடுவர். என்னைப் போன்ற நாட்டிய கலைஞர்கள் எங்கள் பாடத்தில் உள்ள முதல் அடவுகளை ஆடுவோம். அவரவர் குருவை சென்று தரிசித்து குருதட்சணை வழங்கி ஆசி பெறுவோம். புதிய மாணவர்களுக்கு ஆரம்பப்பாடமும் அன்று துவங்கும் நாள்.

துர்க்கையின் மற்றொரு உருவமே மூகாம்பிகை. கொல்லூரில் மூகாம்பிகை ஆலயத்தில் சரஸ்வதி மண்டபத்தில் "வித்யாரம்ப பூஜை' விஜயதசமியன்று மிக விமர்சையாக நடந்து வருகிறது. இங்குப் பெரிய கலைஞர்கள் எல்லாம் வருடா வருடம் தாமே சென்று அந்த வித்யாரம்ப பூஜையை நிகழ்த்துவார்கள்.

எங்கள் நடனப் பள்ளியான நிருத்யோதயாவில் நவராத்திரி விழாவும் அதிலும் முக்கியமாக சரஸ்வதி பூஜையும் மற்றும் விஜயதசமி பூஜையும் பெரிய அளவில் கொண்டாடப்படுகிறது. தசமி அன்று தற்போது கலையில் ஈடுபடாத பழைய சீடர்கள் கூட உலகில் எந்தப் பாகத்தில் இருந்தாலும் தொலைபேசி

மூலமாகவேனும் அவர்களின் வணக்கங்களைத் தெரிவிப்பது வழக்கம். "இந்த வழக்கம் கலை என்பது வர்த்தகத்துக்கு அப்பாற்பட்டது என்பதைக் காட்டுகிறது அல்லவா! நவராத்திரி போன்ற விழாக்கள் இந்து சமுதாயத்தின் ஒப்பற்ற மதிப்பீடுகளை காக்கப் பேருதவியாக இருக்கிறது.

நவராத்திரி விழாவிற்குப் பல கோணங்களிலிருந்து முக்கியத்துவம் இருப்பதை காணலாம்.

1. இது ஒரு சமூக நல்லிணக்க விழா
2. பெண்கள் மங்களகரமாக ஆடை ஆபரணங்கள் அணிந்து கொண்டாடும் விழா.
3. ஒருவருக்கு ஒருவர் தாம்பூலம் பரிமாறிக் கொள்ளும் சுமங்கலிகளுக்குச் சுபமான விழா.
4. மனிதர்களையே தெய்வமாக மதித்து அவர்களுக்கே பூஜை செய்து ஆன்மப் பொருள் விளக்கும் விழா.
5. இந்து சமயம், பெண்களுக்கு மிகச்சிறந்த மதிப்பை அளிப்பதைப் பிரதிபலிக்கும் விழா.
6. கலையும் கலாச்சாரமும் பளிச்சிடும் விழா.
7. கலையும், கல்வி, ஞானம், தொழில் யாவற்றிலும் சக்தியைத் தரிசிக்கும் சமய விழா.

இதன் உள் கருத்தில், பாரத கண்டம் முழுவதையும் இணைக்கும் விழா.

★★★

திருக்கோயில் அமைவிடம்

மதுராந்தகம் எனும் புனிதத்தலம் தமிழ்நாட்டில் சென்னைக்கு தெற்கே தேசிய நெடுஞ்சாலையில் 80 கிலோ மீட்டர் தொலைவில் காஞ்சீபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. மதுராந்தகத்திற்கு வகுளாரண்ய ஷேத்திரம் என்றும் ஒரு பெயர் உண்டு. மகிழ மரங்கள் நிறைந்த இடம் ஆதலில் இப்பெயர் பெற்றது. (வகுளம் - மகிழமரம்)

தலவிருக்ஷம் : மகிழமரம் (வகுளமரம்)

ஆகமம் : பாஞ்சராத்திரம்

பிற சிறப்புகள் :-

1. திருமழிசை ஆழ்வார் சித்தி பெற்ற தலம்.

2. இராமானுஜருக்குப் பஞ்சசமஸ்காரம் ஆன இடம்

3. இராமானுஜர் வெள்ளை

மதுராந்தகம்

அருள்மிகு ஏரிகாத்த இராமர்

பெருமாளின் திருப்பெயர்	:	அருள்மிகு சக்கரவர்த்தி திருமகன் அருள்மிகு கோதண்டராமர்
உற்சவர்	:	அருள்மிகு இராமன், சீதை, இலட்சுமணன், அருள்மிகு கருணாகரப் பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி.
தாயாரின் திருப்பெயர்	:	அருள்மிகு ஜனகவல்லித் தாயார்
விமானம்	:	புஷ்பக விமானம்
நதி	:	சுகநதி (கிளியாறு)
தீர்த்தம்	:	ஸ்ரீ ராமபாத தீர்த்தம்

சாத்துபடியில் சேவை சாதிக்கிறார்.

4. அருள்மிகு பெரியநம்பி ஆராதனை செய்த அருள்மிகு கண்ணனையும், இராமானுஜருக்குச் சாற்றிய சங்கு சக்கரங்களையும் தரிசிக்கலாம்.

5. ஆங்கிலேய கலெக்டர் லியோனல் பிளேசுதுரை கட்டிய தாயார் சன்னதி.

6. அருள்மிகு கண்ணன் சிலை மற்றும் சங்கு சக்கரங்கள் இருந்த சுரங்க அறையினையும் தரிசிக்கலாம்.

7. வடுகநம்பி, திருவரங்கப்பெருமாள் அரையர், அருள்மிகு சுவாமி தேசிகர் மற்றும் மணவாள மாமுனிகள் - மங்களாசாசனம்.

தலவரலாறு

சக்கரவர்த்தி திருமகனாகிய இராமபிரான் இராவண வதத்தின் பின்னர் அயோத்தி செல்லும் வழியில் வகுளாரண்ய க்ஷேத்திரத்தில் விபண்டக மகான் ஆசிரமத்திற்கு புஷ்பக விமானத்தில் இருந்து சீதா பிராட்டியின் இடக்கையினைத் தனது வலக்கையினால் பற்றியவாறு இறங்கி "திருக்கல்யாணக் கோலத்தில்" காட்சி கொடுத்ததாக வரலாறு.

வைணவ ஆச்சார்யரான அருள்மிகு இராமானுஜருக்கு இவ்வூரில் அவரது குரு அருள்மிகு பெரியநம்பிகள் மூலமாக "பஞ்ச சமஸ்கார" மந்திர உபதேசம் நடைபெற்றது. "துவயம்" என்ற மந்திரம் சிறப்பாக உபதேசிக்கப்பட்டமையால் "திவ்யம் விளைந்த திருப்பதி" என்று அழைக்கப்படுகிறது.

அருள்மிகு ஏரிகாத்தராமர் வரலாறு

இத்திருக்கோயில் மூலவருக்கு அருள்மிகு கோதண்டராமர் என்ற பெயருடன் அருள்மிகு ஏரிகாத்தராமர் என்ற பெயரும் உண்டு.

1795 - 98 வரை செங்கை மாவட்ட கலெக்டராக இருந்த திரு பிளேசுதுரை அவர்களிடம் ஊர்மக்கள் வருடாவருடம் இவ்வூர் ஏரிநீர் நிறைந்து உடைப்பெடுத்து ஊருக்குச் சேதம் விளைவிக்கிறது. மராமத்து பணி மேற்கொள்ள வேணும் என்று சொல்ல, வேறு சிலர் இவ்வூரிலிருக்கும் தாயார் சன்னதி சிதிலமடைந்துள்ளது. அதன் வெளிப்பாடாக இருக்கலாம் என்று கூற கலெக்டரும் ஸ்ரீராமர் ஏரி உடையாமல் காப்பாற்றினால் என் செலவில் கோயில் திருப்பணி செய்கிறேன் என்றார்.

அவ்வருடம் மழைக்காலத்தில் ஏரி நிரம்பி வழிந்தது. கலெக்டரும் ஏரியை பார்வையிட்டார். அப்போது அவருக்கு ஸ்ரீராமன் தன் தம்பி லக்குமணனுடன் தரிசனம் தந்து ஏரி உடைப்படுவதிலிருந்து ஊரைக் காப்பாற்றினார்.

கலெக்டரும் கோயிலுக்கு வந்து திருப்பணியை மேற்கொண்டார். திருப்பணி முடித்து சன்னதி உத்திரக்கல்லில் இந்த தர்மம் கும்பினி சாகிர் கலெக்டர் லயோனல் பிளேசு துரை அவர்களது என சிலாசாசனமும் வரைந்துள்ளார். இதனால் ஸ்ரீ கோதண்டராமருக்கு ஸ்ரீ ஏரிகாத்த ராமர்

தாயார் சந்நதி

என்கிற திருநாமமும் சேர்த்துப் பக்தர்களால் அழைக்கப்படுகிறது.

திருவிழாக்கள்

இத்திருக்கோவிலில் மாதப்பிறப்பு. திருவோணம், ஏகாதசி, அமாவாசை, பௌர்ணமி, இராமானுஜ ஜெயந்தி, புனர்வசு வசந்தோற்சவம், ஆழ்வார்கள் சாத்துமுறை, நரசிம்மஜெயந்தி, திருவோணம் கோடை உற்சவம், ஆனிமாதம் பெருந்திருவிழா (கருடசேவை, தேர்த்திருவிழா உள்பட இருவாரங்கள் நடைபெறும்) தட்சணாயனம் புண்ணியகாலம் பஞ்சஸமஸ்கார உற்சவம், பவித்ரோற்சவம், ஜெயந்தி உரியடி உற்சவம், நவராத்திரி, தேசிகர் சாத்துமுறை, தீபாவளி விருச்சிக சங்கிரமணம், சகஸ்ரதீபம், தைலக்காப்பு, ஹனுமத் ஜெயந்தி, பகல்பத்து வைகுண்ட ஏகாதசி, இராப்பத்து, போகி, ஆண்டாள் திருக்கல்யாணம், பரிவேட்டை, திருவோணம், வனபோஜனம், ரதசப்தமி திருவோணம் தவன உற்சவம், மாசிமகம், (தெப்பம்), ஸ்ரீராமநவமி ஒன்பது நாள் உற்சவம், பங்குனி உத்திரம் ஆகிய உற்சவங்கள் மிகச்சிறப்பாக நடைபெறுகின்றன.

★★★

கல்வெட்டு வாசகம்

யிந்ததர்மம் கும்பிணி சாகிர் கலக்ட்டர் லயோனல் பிளேசு துரை அவர்களது

ஜோதிட சக்கரவர்த்தி
ஏ.எம். இராஜகோபாலன்

எம்பெருமான் எனும் பெருஞ்செல்வத்தை மீட்டு அளித்த எம்பெருமானார்!

துறவிகள் அழக் கூடாது.ஏன்?

மகாபுருஷர்களின் கண்களிலிருந்து வரும் ஒரு சொட்டுக் கண்ணீரும் நாட்டையும், சமூகத்தையும், கொழுந்துவிட்டு எரியும் தீயைப் போன்று சுட்டெரித்துச் சாம்பலாக்கி விடும் (ஆதாரம்: தர்ம சாஸ்திரம், சாணக்கிய நீதி நூல்)

இருப்பினும், கண்கலங்கினர் மூன்று மகாத்மாக்கள். அவர்கள் யார்? ஏன் அவர்கள் அவ்விதம் மனம் கலங்கினர்?

ஒருவர், பராசர மகரிஷியின் புதல்வரும், வேதங்களை நான்காக வகுத்துக் கொடுத்தவரும், மகாபாரதம் என்ற இதிகாச ரத்தினத்தை அளித்தவருமான வேத வியாஸர்.

அதுவரை கேட்டிராத, கண்டிராத, மகத்தான கோர, பாரதயுத்தம், குருக்ஷேத்திர புண்ணிய பூமியில் அப்போது தான் முடிந்திருந்தது. துவாபர யுகத்தின் கடைசி நாட்களில் ஆரம்பித்த அம்மஹாயுத்தம், கலியுகத்தின் ஆரம்பத்தில் முடிவுற்றது.

அந்த மகத்தான யுத்தத்தின் மூலம் **தர்மம் வென்றது. அதர்மம் தோற்றது,** ஆனால் , அது **அழிந்து போய் விடவில்லை.**

மிகப் பெரிய ஆலமரம் ஒன்றின் அடியில், சீடர்களுடன் அமர்ந்திருந்த வியாசருக்குக் கவலை, "கலியுகம் பிறந்து விட்டதே! பாபகரமான செயல்களில் எளிதில் ஈடுபடும் சூழ்நிலைகளுக்கு ஈர்க்கப்பட்டு, அதன் விளைவாக கொடிய துன்பங்களுக்கு ஆளாகி, வருந்துவார்களே!. அதைப் பற்றி, முன் கூட்டியே அவர்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டு விட்டால், பாபச்சிந்தனைகளிலிருந்தும், பாபச்செய்கைகளிலிருந்தும் தங்களைக் காத்துக்கொள்வார்களே..." என்று மனம் கலங்கி, ஆழ்ந்த கவலையுடன் சிந்திக்கலானார். அப்பொழுது தான், அவரையும் அறியாமல், அவர் கண்களிலிருந்து பொல, பொலவென்று கண்ணீர் வந்தது.

அதன் விளைவாக நமக்கு கிடைத்த அரிய பொக்கிஷம் தான் **பவிஷ்ய புராணம்** என்ற அற்புத நூல் ஆகும். என்றோ ஸ்ரீ வியாச பகவான் அருளிய அந்த அரிய நூலில் கண்டுள்ள அனைத்தும், சிறிதளவும் தவறாமல் இன்று நடந்து வருவது கண் கூடு.

நமக்காகக் கண்ணீர் சிந்திய இரண்டாவது துறவியார்?

அவர் தான், விஜய நகர சாம்ராஜ்யத்தை உருவாக்கிய மகான் ஸ்ரீ வித்யாரண்யர்.

ஒருநாள் அந்திநேரம்!, புண்ணிய நதியான துங்கபத்திரை நதிக்கரையில், மேற்கு திசையை நோக்கியவாறு, தன் இரு சீடர்களான ஹரிஹரர், புக்கர் என்ற இளைஞர்களுடன் ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்திருந்தார். சூரியன் மலைவாயிலில் அஸ்தமித்துக் கொண்டிருந்தான். துறவியின் கண்களிலிருந்து பொல பொலவென்று கண்ணீர் பெருகியது. திடுக்கிட்டனர் இரு சீடர்களும். அவர்களில் ஒருவன் கேட்டான் - தயங்கி தயங்கி

"ஸ்வாமீ! தாங்கள் ஏன் மனம் கலங்குகிறீர்கள். நாங்கள் ஏதாவது தவறு செய்து விட்டோமா? அவ்விதமானால் எங்கள் இருவரையும் மன்னியுங்கள் ஸ்வாமீ".

குருவின் இரு பாதங்களையும் பிடித்துக்

கொண்டனர் இருவரும். சிறிது நேரம் மௌனம் நிலவியது அங்கு.

பாசத்துடன் இருவரின் தலையையும் தடவிக் கொடுத்தார் அம்மகா புருஷர் - பின்பு பேசினார்:-

"குழந்தைகளே! இன்று நம் நாட்டில் நடக்கும் சம்பவங்களைப் பார்க்கும் போது, எங்கே, நம் பாரத தர்மமும் ஒரு நாள், அதோ மேகத்திடையே மறைந்து கொண்டிருக்கும் சூரியனைப் போல் அஸ்தமித்து விடுமோ என்று அஞ்சுகிறேன்..."

"ஸ்வாமீ, கவலைப்படாதீர்கள். அவ்வாறு ஆகாமல் தடுப்பதற்கு எங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் இப்போதே, இந்த வினாடியே அர்ப்பணிக்கிறோம்" என்று அந்த இரு இளைஞர்களும் கூறி, துங்கா நதி நீரை இருகைகளிலும் எடுத்து வந்து, தங்களை அந்த மகானுக்கும் நம் பாரத புண்ணிய பூமிக்கும் தாரை வார்த்துக்கொடுத்தனர்.

அதன் பலனாகப் பிறந்ததே- விஜயநகர சாம்ராஜ்ஜியம். அதன் மன்னர்கள் தமிழகத் திருக்கோயில்களுக்கு செய்துள்ள திருப்பணிகளும், அளித்துள்ள ஆபரணங்களும் இந்திய சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டவை ஆகும்.

நமக்காகவே கண்ணீர் விட்டு அனைத்தையும் தியாகம் செய்த அந்த மூன்றாவது மகான் யார்?

அவர் தான் வைணவத்திற்குப் புத்துயிர் ஊட்டியவரும், தன் வாழ்க்கை சுகங்கள் அனைத்தையும் வைணவ **தர்மநெறிக்காக** (பிற்காலத்தில் ஸ்ரீ ராமானுஜ தர்ஸனம் எனப் புகழ்பெற்றது.)தயங்காது தியாகம் செய்தவரும், அரங்கத்து அழகிய மணவாளன், திருவரங்க நாச்சியார் திருவுள்ளங்களுக்கு உகந்தவரும், வைணவ தர்மத்தில் எவ்வித பேதத்திற்கும் இடமில்லை என்று உபதேசித்து, அதனைத் தானே கண்டிப்பாக கடைப்பிடித்து வாழ்ந்தவருமான **ஸ்ரீமத்ராமாநுஜர்.**

நினைக்க, நினைக்க, நெஞ்சமெல்லாம் இனிக்கிறது, இம் மகாபுருஷரின் திவ்ய, திருநாமம்!

இத்தகைய அரிய மகாபுருஷரின் கண்களிலா கண்ணீர்?

ஆம்! ஸ்ரீமத் ராமாநுஜரின் கண்களில் தான் கலக்கம்!! கண்ணீர்!!!

சன்னியாசிகள் அனைத்து ஆசைகளையும், பாசபந்தங்களையும் விட்டவர்கள். அவர்களுக்கு இன்பமும், துன்பமும் ஒன்றே. அப்படி இருக்க, இம்மகானுக்கு மட்டும் உள்ளத்தில் அப்படி என்ன கவலை?

அவருக்கும் ஓர் கவலை இருக்கத்தான் செய்தது. துறவிகள் துறக்காத - துறக்க முடியாத - பாச, பந்தம் ஒன்றும் இருக்கத்தான் செய்தது. அது தான், சாட்சாத் எம்பெருமானிடம் அவர்கள் வைத்துள்ள பிரேமை அன்பு கலந்த பக்தி.

ஸ்ரீ நாராயண தீர்த்தர் என்ற மகான் ஒருவர், பகவானைக் குழந்தைக் கண்ணனாக ஆராதிக்கும் பேறு பெற்றவர். அவர் கண்ணன் மீது பாடியுள்ள, உலகப் பரசித்தி பெற்ற வடமொழி பாடல்கள் **"கிருஷ்ணலீலா தரங்கிணி"** உள்ளத்தை உருகச் செய்யும் அர்த்தங்கள் பொதிந்தவை. அப்பாடல்களின் மூலம், மனித வாழ்க்கையில் தூய்மை, நேர்மை, ஒழுக்கம், பக்தி ஆகியவற்றை உபதேசித்து வந்தார் அம்மகான்.

மோகனராகத்தில், அவர் பாடியுள்ள பாடல் ஒன்றில், "காமம் தவபாத கமல, ப்ரேமா பவது"... என்ற வரி வருகிறது. அதாவது, உலகில் ஆசை கூடாது. ஆனால், ஒன்றில் மட்டும் ஆசை, பேராசை என்றும் கூறலாம்-அது வேண்டும். அந்த ஒன்று என்ன தெரியுமா? கண்ணனின் கமல மலர்ப் பாதங்கள் தான்... (காமம் : தீவிர ஆசை)

இத்தகைய ஆசை ஒன்றை மட்டும், ஸ்ரீமத் ராமாநுஜரால் துறக்க இயலவில்லை. அதுதான், ஒவ்வொரு வைணவத் திருக்கோயிலிலும், அர்ச்சாவதார மூர்த்தியாக (விக்கிரகம்) மூர்த்தியாக சேவை சாதிக்கும் (தரிசனம் தந்தருளும்) பேரழகுத் திருமேனி கொண்ட விக்கிரகங்கள்.

காலத்தின் கொடுமையினால் தமிழகம்



அன்னியர்களின் படையெடுப்பின் போது சின்னா, பின்னமாயிற்று. அப்போது ஏராளமான திருக்கோயில்கள் பாதிக்கப்பட்டு, அவற்றில் இருந்த அதி அற்புத, அழகு விக்கிரகங்கள் அழிய நேரிட்டது.

ராமப்ரியன் நிகழ்த்திய அதிசயம்!

இறைவனின் திருவிளையாடல்கள் எவராலும் முழுமையாக புரிந்து கொள்ள முடியாதவை. அவன் திருவுள்ளத்தில் அனைவரும் ஒன்றே. எவரைக் கொண்டு எதைச் செய்து கொள்வது, எவருக்குத் தான் திருவருள் புரிவது என்பவை அவன் மட்டுமே அறிந்த ரகஸ்யம் ஆகும்.

அரங்கப் பெருமானின் தெய்வீகம், பேரழகைப் பிரதிபலிக்கும் அற்புத விக்கிரகம் ஒன்று - திருநாராயணபுரம் என்னும் பக்தர்கள் சதா நெஞ்சிலிருத்திப் பூஜிக்கும் திருத்தலத்தைச் சேர்ந்தது - எப்படியோ, பல டில்லி வீரர்களின் கைகளில் சிக்கி, டில்லி பாதுஷாவின் அன்பிற்கு உகந்த மகளின் பார்வையிலும் பட்டுவிட்டது.

அரையர் சேவை

நாலாயிரம் தந்த நாதமுனிகள் வம்சத்தில் வந்தவர்களை "அரையர்" என்று அழைப்பர்.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை இசையோடு பாடி அபிநயத்தோடு நடித்துப் பக்தர்களைப் பரவசம் கொள்ளச் செய்வது அரையர் தம் சேவை ஆகும்.

ஸ்ரீ வில்லிப்புத்தூர் திருக்கோயிலில் தினந்தோறும் "அரையர் சேவை" நடைபெறுகின்றது.

மார்கழி மாதம் நடைபெறும் பகல்பத்து, இராப்பத்து திருவிழாவின் போது அரையா சேவை முக்கியத்துவம் பெறுகின்றது.

பகல் பத்தின் கடைசி நாளன்று அமிர்த மதனம் நடைபெறும். இதில் அரையர் சுவாமிகள் பாற்கடலில் அமிர்தம் கடைவது போல அபிநயித்துக் காட்டிப் பக்தர்களைக் களிப்புறச் செய்கின்றார்.

சங்கும், சக்கரமும் தன் திருக்கரங்களில் ஏந்தி கண்டவர் மனங்களை அந்த வினாடியே தன்னுடையதாக ஆக்கிக் கொள்ளும் புன்னகையும், எழில் கொஞ்சும் அந்த இரு கண்களும், மந்தகாச வதனமும், அந்த இளம் பெண்ணின் உள்ளத்தை அடிமையாக்கிக் கொண்டு விட்டது.

தந்தையிடம் கூறிவிட்டு பாதுஷாவின் அந்தச் செல்லப் பெண் தன்னிடமே அந்தராமர் விக்ரகத்தைத் தன் அறையில் வைத்துக் கொண்டு விட்டாள் அந்த பெண்.

எப்பிறவியில், என்ன புண்ணியம் செய்திருந்தாள் அன்னிய மதத்தைச் சேர்ந்த அந்த பெண்? அது என்ன உலோகத்தினால் செய்த சாதாரண பிம்பமா? அல்லது சிலையா? அதனுள் மறைந்திருந்த மாய, காந்த சக்தி தான் என்ன?

இந்து சமுதாயத்தின் வாழ்வின் உணர்ச்சிகள், நம்பிக்கை ஆகிய அனைத்தும் அல்லவா, இவ்விக்கிரகமாக வடிவெடுத்துள்ளன!

இவ்வாறு, விக்கிரக வடிவில் இருந்த, அந்த அழகிய மணவாளனும், அந்த துருக்கப் பெண்ணின் மாசற்ற பக்திக்குக் கட்டுண்டவனாக, பாதுஷாவின் அரண்மனையில், அந்த ராஜகுமாரியின் அறையே தன் திருச்சன்னதியாக ஏற்று எழுந்தருளி இருந்தான்.

இதனைத் தான் அளவற்ற, தெய்வீக ஆன்ம, ஞான சக்திகளினால் அறிந்தார் நம் ஸ்ரீமத் ராமாநுஜர். துடி துடித்துப் போனார் அவர். அங்கமெல்லாம் நடுங்கியது. காட்டாற்று வெள்ளம் போல் கண்களில் நீர் பெருகி, அவரது திவ்ய, காஷாய வஸ்திரத்தை ஈரமாக்கியது.

என் அப்பா! என் அரங்கா!! என் செல்வமே!!! என்று அவர் உள்ளம் கலங்கியது. தினம் ஆராதனை உண்டா? தளிகை (நைவேத்தியம்) உண்டா? துளப மணி மாலை உண்டா? பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ வைத்து, அரைத்து சாத்திய சந்தனத்தின் மணம் வீசும் உன் திருமேனி, இவை எதுவும் இல்லாத ஒரு அரண்மனையில் என் செல்வனே என் ஆராஅமுதே, என் உயிரே, அங்கு ஏன் சென்றாய்? எப்படிச் சென்றாய்? நாங்கள் என்ன அபச்சாரம் (தவறுகள்) செய்தோம்? அவ்விதம் செய்திருந்தாலும், அவற்றிற்கு இத்தகைய கொடிய தண்டனை நியாயமாகுமா? மீண்டும் வந்துவிடு எங்களிடம்- நித்ய ஆராதனை கண்டருள்வாய்! ஆழ்வார்கள் கண்டெடுத்த எங்கள் செல்வமே!... என்று ஊண், உறக்கம் அனைத்தையும் மறந்து எவ்விதமாவது, அந்த எம்பெருமானை மீண்டும் திருநாராயணபுரத்தில் எழுந்தருளச் செய்து விட வேண்டும் என்று வைராக்கிய சங்கல்பம் செய்து கொண்டார் ஸ்ரீமத்ராமாநுஜர்.

தொடர்ந்து வரும் ....

காலத்திற்கேற்ற மாற்றம்

QUALITY SINCE 1990

என்றும் உங்கள் பூஜை பொருளாக...

சுகந்தி உடனடி சாம்பிராணி

இயற்கையானது

BEST HOTEL

MADURAI

SRI MUNIYANDI VILAS

Comfortable Stay at
Heart of the Town

HOTEL VAIGAI

A/c & Non A/c Rooms
Opp. Bus Stand

CUDDALORE - 2

Ph. : 224321, 224322, Fax : 223511

மகாபாரதம்

முனைவர் த.அமிர்தலிங்கம்

6

படுகுழியை சகுனி உரைத்த ஆலோசனைப்படியே அமைத்த துரியோதனன் ஒரு லட்சம் போர் அரக்கர்களை அக்குழிக்குள் இருத்துகிறான். அவர்கள் போதாதென்று மேலும் மல்லர்களில் இரண்டு இலட்சம் பேரையும் படுகுழிக்குள் இருத்தும் துரியோதனன், அவர்களும் போதாதென்று 4 இலட்சம் வில் வீரர்களையும் படுகுழிக்குள் இருத்திப் பல ஆயுதங்களையும் கையாள வல்ல படைவீரர்கள் 40 இலட்சம் பேர்களையும் கண்ணனைச் சிறை பிடிப்பதன் பொருட்டு அக்குழிக்குள்ளே இருத்துகின்றான்.

கண்ண பெருமான் ஒருவரை மட்டும் சிறை பிடிக்க துரியோதனன் படுகுழிக்குள் இருத்திய வீரர்களின் மொத்த எண்ணிக்கை மட்டும் 49 இலட்சங்கள். ஒரு படுகுழிக்குள் 49 இலட்சம் போர் வீரர்களை மறைத்து வைக்கத் தக்க அளவிற்கு பூபாரம் மிகுந்து போயிருந்த நேரத்தில், போர் மூலமே பூபாரத்தைத் தீர்க்க முடியும் என்று கண்ணபெருமான் எண்ணியிருக்கிறார் என்பதை எண்ணும்போது எல்லாம் வல்ல அவர் திருவருளை நியாயமானதாகவே போற்ற வேண்டியிருக்கிறது.

கொடியவனான துரியோதனன், கண்ணனுக்குத் தெரியாமல் படுகுழி அமைத்து விட்டதாக எண்ணி மகிழ்ந்திருக்கின்றான்; 49 லட்சம் போர் வீரர்களும் பாய்ந்து போய் கண்ணனை அசைய வொட்டாமல் அமுக்கிப் பிடித்து, அவர் கைகளிலே விலங்கை மாட்டுவது உறுதி என்பதாக எண்ணி இனி தன்னை வெல்ல யாருமில்லை என்பதாக அவன் இறுமாந்திருக்கிறான்.

அவனுடைய தூதுவர்களும் போய் இரவு முடிந்த காலை நேரத்திலே கண்ணபெருமானை துரியோதனன் அவசரமாகக் காண விழைவதாகத் தெரிவிக்கிறார்கள்.

படுகுழி வெட்டப் பட்டதும், அதனுள் லட்சக்கணக்கான போர் வீரர்களை இருத்தியிருப்பதும் மேலே அலங்காரப் பொய்யாசனம் அமைத்திருப்பதும் எல்லாம் அறிந்திருப்பவராகிய கண்ணபெருமான் "துரியோதனா! என்னிடம் செல்லாதடா உன்மாயை; நான் வென்று காட்டுகிறேன். உன் ஆணவப் பேயை" என்று கூறுவதைப் போல் புன்முறுவல் பூத்த வண்ணமே அரசவைக்குப் போய், துரியோதனன் கை காட்டிய பொய்யாசனத்தில் அமர்கிறார்.

ஆசனமும் நெறு நெறுவென்ற சப்தத்தோடு சிதைகிறது. கண்ணபெருமானும் படுகுழிக்குள் தொப்பென்ற ஓசையுடன் விழுகிறார். "அகப்பட்டான் கண்ணன்" என ஆர்ப்பரிக்கின்றனர் துரியோதனனும், அவன் கூட்டத்தார்களும். ஆனால் அதே நொடியில் மண்ணுக்கும் விண்ணுக்குமாக மாபெரும் வடிவம் எடுத்துக் கொண்டு அஞ்சத்தக்க கோபத்தின் வடிவமாகக் காட்சியளிக்கிறார் கண்ணபெருமான்.

இடிகள் முழுங்குவதைப் போன்ற பேரோசைகள் அங்கே தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கின்றன. அவை அனைத்தும் கண்ணபெருமான் காலால் அரக்கரை உதைக்கும் இடிஓசைகளே. கடலலைகள் ஊழிக்காலத்தில் ஒலிப்பதைப் போன்ற கொடிய ஓசைகள் அங்கே தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கின்றன. அவையும் கண்ணபெருமான் தம் கால் விரல் நகங்களால் பப்பரவரையும் மல்லரையும் தூக்கிப் பந்தாடுவதால் உண்டாகும் ஓசைகளே.

பற்பல ஆயுதங்களோடு 49 லட்சம் வீரர்கள் கண்ணன் மேல் பாய, கண்ணபெருமானோ துரியோதனனுக்கு எதிராக ஆயுதம் எடுக்க மாட்டேன் என்று செய்து தந்திருந்த உறுதிமொழி தவறாமல், ஆயுதம் ஒன்றும் ஏந்தாமலே - ஆயுதம் ஒன்றும் தேவைப்படாமலே தம் கால்களையே ஆயுதமாகக் கொண்டு, கால்களால் உதைத்தே வஞ்சகர்களின் தலைகளை வானிலே சிதறுமாறும், பாதாளம் நோக்கிப் பாயுமாறும் உதைத்து வதைக்கிறார். அவருடைய சீற்றத்தின் முன் 49 லட்சம் வீரர்களும் சிற்றெறும்புகளாகி நசுங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

அதனைக்கண்டு பாதாளத்தில் வாழும்நாகர்கள் நடுங்குகின்றனர். மேல் உலக வானவர்களும் கண்ணனை நோக்கி கைகூப்பி கோபத்தில் தங்களுக்கு ஏதும் துன்பம் செய்துவிட வேண்டாம் என்பதைப்போல வணங்கி வேண்டி நிற்கின்றார்கள்.

காத்தல் தொழிலுக்குக் கடவுள் ஆகிய கண்ணபெருமானே விசுவரூபம் பூண்டு அழிக்க முற்பட்டால் எந்தமலை நிற்கும்? எந்தக்கடல் தங்கும்? எந்த உலகம் தான் வாழும்? என்று

தேவர்களும் முனிவர்களும், வேதங்களைச் சொல்லி கண்ணபெருமானை நோக்கி கோபம் நீங்க வேண்டுமெனக் கும்பிட்டுக் குறையிரக்கின்றார்கள்.

"ஆரணனே யரனே புவனங்கள்
அனைத்தையும் அன்றுதவும்
காரணனே கருணாகரனே கமலாசினி
காதலனே
வாரணமே பொதுவேயொரு
பேரிடவந்தருளும் புயலே
நாரணமே முனியேல்முனியேல் என நாகர்
பணிந்தனரே"

(கிருட்டிணன் தூது 209)

"மாதவனே முனியேல் எமை
ஆளுடைவானவனே முனியேல்
யாதவனே முனியேல் இதயத்தில்
இருப்பவனே முனியேல்
ஆதவனே முனியேல் மதிவெங்கனல்
ஆனவனே முனியேல்
நீதவனே முனியேல் என நின்று
பணிந்தனரே"

(கிருட்டிணன் தூது 210)

இவ்வாறு நாகர்கள், வானவர்கள், முனிவர்கள் வணங்கிக் கண்ணனை நோக்கி வேண்ட, துரியோதனனின் சதியிலே பங்கு கொண்டிருந்தவர்களாகிய திருதராட்டிரன், கர்ணன் அவனுடைய தம்பிகள் பலரும்கூட தங்கள் பாவத்தைப் பொறுத்துச் சினம் தவிர வேண்டுமெனக் கண்ணபெருமானின் பாதகமலங்களை வணங்கி வேண்டுகிறார்கள்.

"கண்ண பொறுத்தருள்! வெண்ணெய்
அருந்தியகள்வ பொறுத்தருள்! கார்
வண்ண பொறுத்தருள் வாம பொறுத்தருள்!
வரதபொறுத்தருள்! நீ
திண்ணமனத் துணர்வொன்று
மிலாதவர்செய்த பெரும்பிழையென்று
அண்ணல் மலர்க்கழல் சென்னியில்
வைத்தெதிர் அன்று துதித்தனரே"

(கிருட்டிணன் தூது 212)

"என் வில்லின் கொடுங்கணையால் கண்ணனை மாய்ப்பேன்" என்று இரவு சதியாலோசனை கூட்டத்தில் வீரம் பேசிய கர்ணனும், 'இரும் புலி வலையிற் பட்டால் விடுவரோ எயினரானோர்" என்று சதி ஆலோசனைகூறிய திருதராட்டினனும் மற்ற மற்ற துரியோதனனின் வஞ்சக் கூட்டணியினரும் இவ்வாறு 'பொறுத்தருள் பொறுத்தருள்" எனக்கால் மேல்வீழ்ந்து வணங்கி கண்ணபெருமானைச் சாந்தப்படுத்துகிறார்கள்.

அவ்வாறு சாந்தப்படுத்தியிருக்கா விட்டால், பதினெட்டு நாட்கள் நடைபெற்று முடிய வேண்டிய பாரதக் கொடும்போருக்கு வாய்ப்பே இல்லாமல் துரியோதனர்கள் கூட்டம் அப்பொழுதுதே அழிந்து பட்டிருக்கும்.

ஆனால் இவ்வளவு நடந்தும், விண்ணுக்கும் மண்ணுக்குமாகக் கண்ணபெருமான் கொண்ட விசுவரூபத்தைப் பார்த்தும், அங்கே தன் கண்ணெதிராகவே 49 லட்சம் போர் வீரர்கள் தலைசிதறிக் கைகால்கள் தனித்தனியே சிதறி இரத்தக் கடலில் துடித்ததைப் பார்த்தும்கூட துரியோதனன் ஒரு சிறிதும் மனஞ்சலிக்கவில்லையாம். எனில் அவன் அரக்கமனத்தின் தன்மையை எப்படி எடுத்துரைப்பது? துரியோதனனுடைய விபரீத காலக் கொடுமையே அவன் கண்ணபெருமானை வணங்கவும், பிழையைப் பொறுக்குமாறு வேண்டவும் முயலாதவாறு அவனைத் தடுத்தது போலும்!

விசுவரூபம் அடக்கி, தம் மானிட வடிவை மீண்டும் கொள்ளும் கண்ணபெருமான், "துரியோதனா! நீ உன் தீய அறிவினாலே என்னைக் கொல்ல முயன்றாய். ஆனால், நான் எண்ணியிருப்பேனேயானால், உன்னுடைய வம்சம் முழுவதும் அழிந்து ஒழியுமாறு ஒரே நொடி நேரத்தில் பொடிப் பொடியாக்கியிருப்பேன். ஏன் நான் அப்படிச் செய்யவில்லை தெரியுமா? போரில் உனக்கெதிராக ஆயுதம் ஏந்த மாட்டேன் என்று என்னால் உனக்குத் தரப்பட்ட உறுதி மொழியைக் காப்பதற்காகத்தான். அதுமட்டுமல்ல; நானே உன்னையும், உன் கூட்டத்தையும் அழித்துவிட்டால் அன்றைக்குப் பாண்டவர்கள் உங்களை அழிப்பதாகச் செய்திருக்கிற சபதத்தை நிறைவேற்ற வழியில்லாமல் போய் விடும். ஆகவே தான் உன்னை அழிக்காமல் இப்பொழுது விட்டுப் போகிறேன்" என்பதாகக் கூறி, இனியும் அங்கே நிற்பதில் யாதொரு அர்த்தமும் இல்லை என்பதாக துரியோதனனின் அரண்மனையை விட்டுப்புறப்படலானார்.

(தொடரும்)

ஞானம் பெற மூன்று வழிகள்

1. ஞானிகளோடு தொடர்பு கொள்ளுதல்
2. ஞான நூல்களை ஓதுதல்
3. புண்ணிய நதிகளில் ஆடி, புண்ணிய திருத்தலங்களைத் தரிசித்தல்

திருமந்திர உபதேசம்

...முன் தொடர்ச்சி

திருமந்திரச்செம்மல்
திருமிகு டி.வி. வெங்கட்ராமன் (இ.ஆ.ப.ஓய்வு)

உயிர் உடலுடன் இணைந்திருப்பது, வினைகளைக் கழித்துக் கொள்வதற்காகவே, பூவும் மணமும் போல உயிரும் உடலும் இணைந்திருந்தாலும், உயிர்வேறு; உடல் வேறு ஆனால் உடலில் புகுந்த உயிர் தன்னை வேறு படுத்திக் கொள்வதில்லை. அறியாமையால் உடலைத் தான் என்று கருதிக் கொள்கின்றது. பொறி புலன்கள் வாயிலாக புறத்தே உலகப்பொருள்களைத் துய்த்து இன்பம் பெற விழைகின்றது. அவ்வகையாக, பழைய வினைகளைக் கழிப்பது மட்டுமின்றி புதிய வினைகளைச் சேர்த்துக் கொள்கின்றது.

இங்கேதான் அறமும், தவமும், கடவுள் வழிபாடும், ஒழுக்கங்களும் உயிரைப் பண்படுத்தி பொறி புலன் அனுபவங்களின் உண்மைத் தன்மையை உணர்த்தி உயிரை, உடலின் வேறாக அறிந்து கொள்ள உதவுகின்றன. உடலைப்பற்றிய கருத்து மாறினாலும். உடலின் இன்றியமையாமை மறைவதில்லை. உடல் உயிருக்கு இருப்பிடம். உயிருக்கு உயிராக உடலைக் கோயிலாக் கொண்டு வீற்றிருப்பவன் இறைவன். உயிரின் படிநிலை வளர்ச்சிக்கு உடல் அடிப்படையாக அமைகின்றது. அங்கே தான் உயிர் தனது பாடங்களைக் கற்றுக் கொள்கிறது. உடல் கருவிகளை இறைவன் வழிபாட்டிற்கும், அடியார்களைப் போற்றிப் பேணுவதற்கும், சமுதாயத்தின் இடர்களைக் களைவதற்கும், பயன்படுத்தும் போது உயிர் வளர்ச்சி பெறுகிறது. பண்பும், பக்குவமும் அடைகிறது. இவ்வாறு உடலை வளர்த்து, உயிரை வளர்த்தேன் என்கிறார் திருமூலர் பெருமான். உடலை வளர்த்தல் என்பது உடலைச் சார்ந்த தூல, சூக்கும கருவிகளைப் பண்படுத்தி இறைவன் பால் சேர்ப்பதேயாகும். உயிரும் தன்னிலை உணர்ந்து தன்னைப் போலவே இறைவனும் உடலிடம் கொண்ட காட்சியைக் கண்டு அனுபவிக்கின்றது. திருமூலர் பெருமான் அருளும் இந்தக் கருத்துக்களை நாம் மேலும் சிறப்பாகச் சிந்தித்து பயனடைய வேண்டும்.

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்,
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

(திருமந்திரம்)

"உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்.
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான்

என்று

அன்புள்ள ஆசிரியருக்கு,

பார்க்க, படிக்க, பாதுகாக்க அற்புதமான ஆன்மிக இதழ் "திருக்கோயில்". பத்திரிகையாளர் என்ற வகையில் எனது மனமார்ந்த பாராட்டுகள்.

- இலக்கியமாமணி பி.வி.கிரி
சென்னை - 40.

ஒவ்வொரு செய்தியும், ஒவ்வொரு பக்கமும், புதுமை, அருமை.

-சீ. வசந்தி,
தொல் பொருள் ஆய்வுத் துறை,
சென்னை



உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே"

(திருமந்திரம்)

உயிர், உடலில் மறைந்து, உடலைத் தானாகவே கருதி உலகத்தைத் தெரிந்து கொண்டு, பொருட்களை நாடுகிறது. உயிரின் முடிவான கொள்கை அத்தகையதாக இருக்க முடியாது. இறைவனைத் தெரிந்து கொள்வதே உயிரின் உண்மையான குறிக்கோளாகும். நாட்கள் நழுவிக் கொண்டு போகின்றன. இதை நாளைச் செய்வோம் என்று வெறுமனே இருப்பது நமககுத் தான் தீங்கைத் தரும். அறவழிநின்று, இறைவனை என்றும் மனதில் வைத்து, அன்போடு வழிபட்டு, வாழ்க்கையைப் பயனுள்ளதாக அமைத்துக் கொள்ள வேண்டும். நேரம் சடக்கென்று போய்விடுகிறது. அதைக்கண்டும், காணாதது போல் இருப்பது நமக்கே பெருத்த இடரை விளைவிக்கும்.

"போது சடக்கென போகின்றது கண்டும்
வாது செய்தென்னோ மனிதர் பெறுவது
நீதியுளே நின்று நின்மலன் தாள் பணிந்து
ஆதியை அன்பில் அறியகில்லார்களே"

(திருமந்திரம்)

போது சடக்கென்று போய். உயிர் உடலை விட்டு வெளியேறுகிறது. சிலகாலம் எங்கோ தங்கிவிட்டு, இறைவன் நியதிப்படி மீண்டும் ஒரு உடலில் நுழைகிறது. புதிய உடலை, உயிர் எப்படி எப்போது சேர்ந்தது, என்றெல்லாம் ஆராய்ந்து பார்க்கலாம். வினையைச் செய்வது நாம். அதன் பயனை அனுபவிக்க வேண்டியவர்களும் நாமே. வினை உடல் ஒன்று தானாக வந்து சேராது. அதை உயிருடன் சேர்க்க ஒருவன் வேண்டும். இறைவன் இப்பணியை ஒருபிசகுமின்றி செய்கிறான். என்ன அற்புதம்? இதை எண்ணிப் பார்க்கும் போதே, கண்ணீர் கண்களை மறைக்கிறது. இறைவன்பால், தூய்மையான அன்பு உள்ளத்திலே சுரக்கின்றது. திருவருளை நாடிப் பெறுகிறது. இத்தகைய இன்ப உணர்விலே நாம் நிற்காமல் உலக மாயையைத்துரத்திக் கொண்டு சென்று மீண்டும், மீண்டும் பிறவி எடுப்பதில் என்ன பயன்? திருமூலர் பெருமான், இறைவனிடம் அன்பு செலுத்து, அருளைப் பெற்று, பிறவிச் சூழலிலிருந்து விடுபடலாம் என்கிறார்.

"இக்காயம் நீக்கி, இனியொரு காயத்தில்
புக்குப் பிறவாமல் போம் வழி நாடுமின்
எக்காலத்திவ்வுடல் வந்தெமக்கானதென்று
அக்காலம் உன்ன அருள்பெறலாகுமே"

(திருமந்திரம்)

அது எவ்வழி? பறவை ஒன்று, ஒருகூட்டில் சில நாட்கள் தங்கியிருந்து. பின்னர், இரையை நாடிப்பறந்தோடி விடுகிறது. அதுபோல, உயிரும் இந்த உடலாகிய கூட்டில் சிறிதுகாலம் தங்கி விட்டு, தனக்கே தெரியாத இடத்திற்குச் சென்று விடுகிறது. அது தான் அடைய வேண்டிய பயனை உண்மையாகவே, அடைய விரும்பினால், உடலை விட்டு பிரிகின்ற காலத்திலும், சிவபெருமானை மறவாது நினைக்க வேண்டும். அப்படி நினைத்தால், உயிர் அடைய வேண்டிய சிவகதியைப் பெறும். சிவகதியானது இறப்பையும் பிறப்பையும் கடந்த ஒரு பேறாகும். நமது கற்பனைக்கும் எட்டாத ஒரு பேருலகமாகும். இது திருமூலர் பெருமான் நமக்கெல்லாம் தெளிவாக எடுத்துரைக்கும் பரிந்துரையாகும்.

"பறக்கின்ற ஒன்று பயன்உற வேண்டின்
இறக்கின்ற காலத்தும் ஈசனை உள்கும்
சிறப்பொடு சேரும் சிவகதி பின்னைப்
பிறப்பொன் நிலாமையும் பேருலகாமே"

(திருமந்திரம்)

★★★

? பதில்



டாக்டர் ஜி. சீனிவாச சாஸ்திரிகள்

கணபதி, என்.பிளாக், வள்ளீஸ்வரன் தோட்டம், ஆர்.ஏ.புரம்

கேள்வி : பஞ்சாக்ஷரம் எந்த வேதத்தில் எங்கே சொல்லியுள்ளது? அதன் பயன் என்ன?

பதில் : கிருஷ்ணயஜுர் வேதம் ருத்ரப்ரச்னத்தில் 8வது அனுவாகத்தில் 20வது வார்த்தையில் பஞ்சாக்ஷரம் சொல்லப்பட்டுள்ளது. ஆபத்தைப் போக்குவது ஐந்தெழுத்து. பாபத்தைப் போக்குவது பஞ்சாக்ஷரம் ஆகும்.

எம்.அனுராதா, 3,குளத் தெரு, மயிலை

கேள்வி : குழந்தைகள் நன்றாக படிப்பதற்கு வேதத்தில் எந்த பாகத்தை பாராயணம் செய்ய வேண்டும்?

பதில் : மேதாசூக்தம், ஸாரஸ்வதசூக்தம் இவைகளை பாராயணம் செய்யலாம்.

திரிபுரசுந்தரி, 17, வெங்கடேஸ்வரா அவின்யூ, சென்னை-48.

கேள்வி : நன்றாக (சரளமாக) பேசுவதற்கும், திக்குவாய் நிவர்த்திக்கும் வேதத்தில் வழி உண்டா?

பதில் : வாக்சூக்தம், மேதினீசூக்தம், தேவீசூக்தங்கள் ஜபித்தால் மேற்சொன்னவைகள் நிவர்த்தியாகும்.

ஜவகர்லால், 1, கோட்ஸ் ரோடு, சுந்தரம் ப்ளாட்ஸ், தி.நகர், சென்னை-17.

கேள்வி : தரணியில் தண்ணீர் பஞ்சம் தீர வேதத்தில் எந்த மந்திரம் ஜபிக்கவேண்டும்?

பதில் : இறைவன் வழிபாடும், பர்ஜன்ய சாந்தியும், வருண சூக்தாதிகளும், முறைப்படி பாராயணம் செய்தால் தண்ணீர் பிரச்சனை தீர வழி உண்டாகும்.

இந்துமதம்

இந்து அல்லது ஹிந்து என்ற சொல்லை ஹிம்+து எனப் பிரிக்கலாம்.
(ஹிம் = ஹிம்சையில்
து = துக்கிக்கின்றவன்)
ஓர் உயிர் எந்தக் காரணத்தினாலாவது வருந்துவதாய் இருந்தால், அத்துன்பம் தனக்கு வந்ததாய்க் கருதி, அதை அகற்ற எவன் ஒருவன் பணி புரிகின்றானோ அவனே இந்து ஆவன். அத்தகைய பண்பு வாய்ந்த மக்களைக் கொண்ட மதமே இந்து மதமாகும்.

அன்னாபிஷேகச் சிறப்பு

பாரதநாட்டில் தலை சிறந்த சிவத்தலங்களுள் ஒன்றான ஆகாச க்ஷேத்ரமெனும் புகழ்பெற்ற சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருக்கோயிலில் இடம் பெற்றுள்ள ஸ்ரீ சந்த்ரமௌளீச்வர ஸ்படிக லிங்கத்திற்குப் பிரதி தினம் 6 காலங்கள் அபிஷேகம் நடைபெறுகிறது.

ஒவ்வொரு காலத்திலும் அந்த லிங்கத்திற்குப் பால், தேன் முதலிய திரவியங்களால் மட்டுமல்லாது பச்சை அரிசியைக் கொண்டு பக்குவம் செய்யப்பட்ட சுத்தமான அன்னமும் அபிஷேகம் செய்யப்படுகிறது. இதன் பயன் மனிதன் முதல் உயிர்வாழ்வன யாவற்றிற்கும் தட்டுப்பாடில்லாது உணவு கிடைக்கும் என்பது ஆன்றோர் கருத்து.

இப்படி தினமும் தென்னாட்டில் உள்ள சிவாலயங்களில் சிவலிங்கத்திற்கு அன்னாபிஷேகம் நடப்பதில்லை. ஆனால் பிரதி வருடமும் துலா(ஐப்பசி) மாதத்தில் பூர்ணிமையன்று அந்திப் பொழுதில், அநேகமாக எல்லாச் சிவன் கோயில்களிலும் சிவலிங்கத்திற்கு அன்னம் சாற்றப்படுகின்றது. ஐப்பசி மாதத்தில் சிவனுக்கு அன்னாபிஷேகம் செய்வதின் மேன்மையும் பயனும் காசியப முனிவர் என்ற தெய்வீகக் கவிஞர் இயற்றியுள்ள பேரூர்ப் புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

"துலாபன்மதியில் பூரணையில் தூய அன்னம் கீற்றளைவெண்
நிலாவை முடித்த பொலஞ்சடில் நிமலற்காட்டும் பெருந்தவத்தோர்
கலவும் அன்னம் ஒரோ ஒன்று தனக்கு கற்பம் ஒரோ ஒன்று
குலாவி சிவலோகத்தெய்திக் கோதில் இன்பம் நுகர்வாரால்"

துலா(ஐப்பசி) மாதப் பூர்ணிமையன்று சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்யப்படும். அன்னத்தின் ஒவ்வொரு திவலையும் சிவலிங்கத்தின் உருப்பெறும். அந்த அன்னாபிஷேகத்தில் ஈடுபடுபவரும் அதனைத் தரிசிப்பவர்களும் இம்மையில் எல்லா நன்மைகளையும் அடைவதுடன் பிறவிப் பிணியிலிருந்து விடுபடுவர் என்று மேலுள்ள செய்யுளிலிருந்து அறியலாம்.

கங்கை கொண்ட சோழபுரம் திருச்சி, தஞ்சை தென்னாற்காடு மாவட்டங்களின் எல்லையோரத்தில் அமைந்துள்ளது. இது சரித்திரப் புகழ்பெற்றது. முதலாம் இராஜேந்திரன் சுமார் கி.பி. 1020 ஆம் ஆண்டில் கங்கைகொண்ட சோழ புரத்தில் ஒரு சிற்பக் கலை அழகும், கட்டிடக்கலைச் சிறப்பும் கொண்ட பெரும் கோயிலை எழுப்பி, அதனில் ஒரு மாபெரும் சிவலிங்கத்தையும் பிரதிஷ்டை செய்வித்து, குடமுழுக்குச் செய்தான். இங்குள்ள லிங்கம் நாட்டிலேயே மிகப்பெரியது எனில் மிகையாகாது.

ஐப்பசி பூர்ணிமையில், கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயிலிலுள்ள அருள்மிகு பெருவுடையாருக்குக் கடந்த 18 ஆண்டுகளாக சிறப்புடன் அன்னாபிஷேகம் மிகச் சிறப்புடன் நடைபெற்று வருகிறது.

இவ்வாண்டு 27.10.2004 அன்று காலை 10 மணிக்கு மேல் அன்னாபிஷேகம் ஆரம்பித்து மாலை 5.30 மணி அளவில் மகாதீபாராதனை நடைபெறும். இரவு 8.30 மணிக்குப் பக்தர்களுக்கு அன்னம் பிரசாதமாக வழங்கப்படும். இவ்வன்னாபிஷேக அன்னம் அருந்திய பக்தர்கள் இகபர சுகங்கள் யாவும் பெற்று இன்புறுவது திண்ணமாகும்.

★★★



OKEY ROTARY PRINTING ✓OKAY ROTARY PRINTING

தரத்திற்கு என தனி முத்திரை பெற்ற நிறுவனம்

உங்களுக்கு மிக அருகில்
(24 மணி நேரமும்)
சிறந்த சேவை

100% Guarantee
KNIT & WOVEN

okey

குவாலிட்டியான ரோட்டரி பிரிண்டிங்கிற்கு

ஓகே. ரோட்டரி பிரிண்டிங்

STORMAERD IV 12 COLOUR 72" WIDTH = 2 MACHINE

REACTIVE ❖ PIGMENT ❖ DISCHARGE

ஓகே. ரோட்டரி பிரிண்டிங்

ஓகே. டெக்ஸ்டைல்ஸ்

200/3, முருகம்பாளையம், கே.வி.ஆர்.நகர் (வழி)
திருப்பூர்-7. போன் : 2242790, 2246054,
பேக்ஸ் : 2204683

Contact : முருகசாமி செல் : 0421 3203690
ஆசீர்வாதம் செல் : 0421 3203691

ஏற்றுமதியாளர்களின் தரத்தின் தேவையை நன்கு உணர்ந்த நிறுவனம்

OKEY ROTARY PRINTING ✓OKAY ROTARY PRINTING

விநாயகப் பெருமானும்-சனீஸ்வரனும்

விநாயகப் பெருமானை வழிபட்டால் விநாயகர் சனீஸ்வரன் பிடியிலிருந்து அடியார்களைக் காப்பற்றிக் கரைஏற்றி விடுவது திண்ணமாகும்.

ஒருமுறை விநாயகப் பெருமானைப் பிடிப்பதற்காக சனீஸ்வரன் சென்றார். "இன்றுபோய் நாளைவரும்" என்றார் விநாயகர்.

மூத்த முதற் கடவுள் என்பதால்' அவர் வார்த்தைக்கு மதிப்பளித்துச் சனீஸ்வரன் "இன்றுபோய் நாளை வருகிறேன்" என்றார்.

"அதை இந்தப் பலகையில் எழுதி வைத்துச் செல்லும்" என்றார் விநாயகர்.

சனீஸ்வரனும் அதனைப் பலகையில் எழுதி வைத்து மறுநாள் வந்தார்.

"பலகையில் என்ன எழுதியிருக்கிறீர்?" என்றார் விநாயகர்.

"நாளை வந்து பிடித்துக்கொள்கிறேன்" என எழுதியிருக்கிறேன் என்றார் சனீஸ்வரன்.

"சரி, நாளை வாரும்" என்றார் விநாயகர்.

இவ்வாறே நாளை நாளை என சனீஸ்வரனை நடக்க வைத்தாரே தவிர, சனீஸ்வரன் தன்னைப் பிடிக்க அனுமதிக்க வில்லை விநாயகர்.

விநாயகர் தன்னை வழிபடும் அடியார்களையும் அவ்வாறே சனியின் பிடியிலிருந்து விடுவித்துக் காத்து வருகின்றார்.

★★★

வள்ளலார் உபதேசங்கள்

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்"

என்று பாடிய அருளாளர் அருட்பிரகாச வள்ளலார் ஆவார்.

"நல்லோர் மனதை நடுங்கச் செய்தேனோ?"

என்று அவர் பாடியிருப்பது கொண்டு நல்லவர்கள் மனம் நோகச் செய்வது பாவமாகும் பாவங்களில் கொடியதாகும் என அறியலாம். வள்ளலார் தோன்றிய மாதம் அக்டோபர் மாதம் ஆகும். தோற்றம் 5.10.1823 நிறைவு 30.1.1874. அவர் அருளிய உபதேசங்கள் சிலவற்றை ஈங்குக் கண்டு இன்புறலாம்.



1. கடவுள் ஒருவரே.
2. எவ்வுயிரும் தம் உயிர்போல் எண்ணுக.
3. ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமையைக் கடைப்பிடித்திடுக.
4. ஏழைகளின் பசிதவிர்த்தலாகிய ஜீவகாருண்யமே பேரின்ப வீட்டின் திறவுகோல் என்றறிக.
5. எக்காரியத்திலும் பொது நோக்குடன் செயல்படுக.
6. அன்பர் திருவுளம் கோயிலாகக் கொண்டே
   அற்புதச் சிற்சபை ஓங்கும் அரசனாம்
   அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை விடுத்து
   வன்பரிடைச் சென்று மயங்காதீர்.
7. கண்கட்டி ஆடும் பருவத்திலே
   ஒரு பெண்கட்டி ஆள நினைத்துப்
   புண்சட்டியாய் அலைந்து
   மண்கட்டிபோல் உதிராதீர்.
8. திருவருள் தேனுண்டு மகிழ்ந்து
   கலந்து உறவாடும் நாள் எந்தநாளோ
   என எண்ணி எண்ணி ஏங்குக.
9. கள் அருந்துதல், சூதாடுதல், காமக்கடைதொறும் மயங்குதல், பொய்யே விள்ளுதல் (பேசுதல்) ஆகியவற்றை அறவே ஒழித்திடுக.
10. சாதி சமயச் சழக்கை விட்டால் அருள்ஜோதியைக் காணலாம்.
11. ஊழை அகற்றும் வழியறிக, காமஐம்புலன்களை விரட்டுக.
12. பொய்விரிப்பார்க்குப் பொருள்விரித்து,
    நற்பொருட் பயனாம் மெய்விரிப்பார்க்கு
    இரு கை விரிப்பவரிடம் மேவாதீர்.
13. இன்றிருந்தவர் நாளை நின்றிலரால்,
    நன்று செய்வதை இன்றே செய்திடுக.
14. வஞ்சநெஞ்சர்தம் சேர்க்கையைத் துறந்து வள்ளல் திருமலரடி ஏத்துக.

★★★

வள்ளலார் வலியுறுத்திய பதவி

பசித்திரு தனித்திரு விழித்திரு

ஞானப் பசியோடு இருத்தல் வேண்டும். பத்தோடு பதினொன்று என இராமல் ஒரு தனிச் சிறப்போடு செயற்படுதல் வேண்டும். ஞான விழிப்புடன் இறையருளோடு கலக்கும் நாளை எண்ணிக் காத்திருத்தல் வேண்டும். இதுவே வள்ளலார் நமக்கு அறிவுறுத்திய ஒப்பற்ற உபதேசம் ஆகும்.



கண்கொடுத்த கண்ணப்பரைப் புகழும் திருப்புகழ்

திருப்புகழ் மாமணி
மு. அருணகிரி

திண்ணன் எனப்படும் கண்ணப்பர், அப்பர், மாணிக்கவாசகர், ஞானசம்பந்தர் போன்றோர்களால் புகழ்ந்து பாடப்பெற்றுள்ளார்.

கண்ணப்பரைப் பற்றித் தாம் பாடிய திருப்புகழில், மேற்கூறிய மூவரது பாடல்களையும் விஞ்சிவிடும் விதத்தில், அருணகிரி நாதர் பாடியுள்ளதைப் படித்தாலே பலர் கல்நெஞ்சமும் கரையச் செய்யும்.

"வதனசரோருக நயனசிலீமுக" எனத் துவங்கும் திருப்புகழில் 3-வது அடியில்,

"இதவிய காணிவை சதையென
வேடுவன்எய்திடும்
எச்சில் தின்று லீலாசலமாடும் தூயவன்மைந்த"...

என நிந்தா துதியில் பாடியுள்ளது, அகக் கண்கொண்டு பொருளை உணர்ந்து அனுபவிப்பதே சிறப்பாகும் எனக் கருதுகிறேன். கருத்தைப் பார்ப்போம்... இவை நிறைய ருசியுள்ளவை என, வாயினால் ருசி பார்த்துக் கொடுத்த உணவைத்தின்று பொய்மையான விளையாடலை நிகழ்த்திக் காட்டிய பரிசுத்த மூர்த்தியாம் சிவனின் மைந்தனே என்பதாகும்.

மற்றுமோர் பாடலைப் பார்ப்போம். "மச்சமெச்சுசூத்ரம்" எனும் திருப்புகழ்ப்பாடல்.

"பொக்க ணத்து நீற்றை யிட்டொருத்தனார்க்கு
புத்தி மெத்த காட்டு... புனவேடன்
பச்சிலைக்கும் வாய்க்கு ளெச்சிலுக்கும் வீக்கு
பைச்சிலைக்கும் ஆட்கொ ளரன்."

இதன் கருத்தைப் பார்ப்போம். விபூதி அணிந்த சிவகோசரியார் எனும் அர்ச்சகருக்கு அன்பே பிரதானம் எனும் உண்மையைப் புகட்டின வேடனாம் கண்ணப்பர் தந்த பச்சிலைகளைப் பூஜைக்கும், வாயிலில் இருந்து உமிழ்ந்த எச்சிலாம் அபிஷேகத்துக்கும், அவர் கட்டியிருந்த அம்பறாத் துணிப்பைக்கும் வில்லுக்கும் உகந்து அவரை ஆட்கொண்டருளிய சிவபெருமானே எனக் கூறியதிலிருந்து கண்ணப்பரின் உயரிய பக்தியை அறிய முடிகிறது.

★★★

- விநாயகர் தனது ஒற்றைக் கொம்பை ஒடித்து எழுதிய நூல் மகாபாரதம்.
- விநாயகருக்கு முதன்முதலில் கொழுக்கட்டை நிவேதனம் செய்தவர் அருந்ததி ஆவார்.
- கணபதி வழிபாட்டில் முதலிடம் பெறும் மாநிலம் மகாராட்டிரம்.
- விநாயகர் அருள்பெற்றுத் திருமுறைகளை நமக்குத் தொகுத்துத்தந்த அருளாளர் நம்பியாண்டார் நம்பி.

தீராநோய் தீர்த்தருளும் நூபுரகங்கை

அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் மதுரைக்கு வடக்கே 21 கி.மீ தூரத்தில் இருக்கிறது. இதில் அழகர் என்ற பெயர் கொண்ட திருமால், கோயில் கொண்டிருப்பதால் இது அழகர்மலை என்று சொல்லப்படுகிறது. இம்மலையை

"ஆயிரம் தோள் பரப்பி முடியாயிரம் மின்னிலங்கு
ஆயிரம் பைந்தலைய அனந்தசயனன் ஆளும்மலை
ஆயிர மாறுகளும் சுனைகள் பலவாயிரமும்
ஆயிரம் பூம்பொழிலுமுடை மாலிருஞ்சோலையதே"

என நாலாயிரத் திவ்யப்பிரபந்தப் பாடல் போற்றுகின்றது.

இத்தலத்தில் நூபுரகங்கை என்னும் புனித தீர்த்தம் மலை மீது 4. கி.மீ. தூரத்திலும், கடல் மட்டத்திலிருந்து 1405 அடி உயரத்திலும் அமையப்பெற்றுள்ளது. இத்தீர்த்ததில் இரும்புச்சத்தும், தாமிரச்சத்தும் அதிகம் இருப்பதாக தெரிகிறது. இது நோய்களைத் தீர்க்கும் குணம் உடையது.

**"அலம்பா வெருட்டாக் கொன்று திரியும் அரக்கரை
குலம்பாழ் படுத்து குலவிளக்காய் நின்ற கோன்மலை
சிலம்பார்க்க வந்த தெய்வமகளிர் களோடும் சீர்
சிலம்பாறு பாயும் தென் மாலிருஞ்சோலையே"**

எனவரும் பாடலில் இத்தீர்த்த்திற்கு சிலம்பாறு எனும் பெயர் வழங்கியமை கூறப்பட்டுள்ளது. இதன் சுவை இனிமையானது. இதனை பழைய நூல்கள் "தேனாறு" என்று அழைக்கின்றன.

நூபுரகங்கை

இது சோழர் தலைநகரான உறையூரிலிருந்து பாண்டியர் தலைநகரான மதுரைக்குச் செல்லும் ஒரு வழியில் அமைந்திருப்பதாகச் சிலப்பதிகாரம் கூறும். இங்குள்ள திருமாலை தரிசித்துக் கொண்டு திருவரங்கத்திற்குச் செல்லும் அந்தணர் ஒருவன் மதுரைக்கு வந்து கொண்டிருந்த கோவலன், கண்ணகி, கவுந்தியடிகளை வழியில் சந்தித்து இம்மலையின் பெருமைகளைப் பற்றிக் கூறுகிறான். இத்தலத்தில் மூன்று தீர்த்தங்கள் இருக்கின்றன. அவை புண்ணிய சிரவணம். பவஹாரிணி, இஷ்டசித்தி எனச் சிலப்பதிகாரம் கூறுவதால் அக்காலத்தில் இம்மலைக்கும் இதிலிருக்கும் திருமாலுக்கும் உள்ள பெருமை நன்கு விளங்கும். அந்நூலில் சொல்லப்பட்ட மூன்று தீர்த்தங்களும் எவை என்று இப்போது தெரியவில்லை. தல

புராணத்தில் அம்மூன்றும் நூபுரகங்கை என்ற சிலம்பாற்றின் பெயராகவே குறிக்கப்பட்டுள்ளது.

நூபுரகங்கையின் தோற்றம்:-

அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனாம் மகாவிஷ்ணு தன்னுடைய உடலைச்சிறுகச் சுருக்கி "வாமனனாக" மகாபலி சக்கரவர்த்தியின் எதிரில் தோன்றி மூவடி மண் தானமாகப் பெற்றார். மூவடி அளிக்க திருமால் தன்னுடைய அளப்பரிய தோற்றத்தை வெளிப்படுத்தி தமது ஒரு அடியால் பூலோகம், புவர்லோகம், மகாலோகம், ஜனலோகம், தபோலோகம், ஸத்ய லோகம் என ஏழுலகங்களையும் அளந்தார். அவ்வாறு அளக்கும் போது ஸத்யலோகத்தில் பிரம்மா தமது கமண்டலத்திலிருந்து புனிதமான கங்கை தீர்த்தத்தை எடுத்து பகவானது பாத கமலங்களில் பூஜை செய்தாராம். அப்பொழுது அவரது திருவடித்தாமரைகளில் அணிந்திருந்த நூபுரத்திலிருந்து சில நீர்த்துளி பூலோகத்தில் திருமாலிருஞ்சோலையில் விழுந்து "நூபுரகங்கை" - சிலம்பாறு" என்னும் பெயரோடு பிரவாகம் எடுக்கத் துவங்கியது. எனவேதான் ஆச்சார்யப் பெருமக்கள் இதை "கங்கையிலும் புனிதமான நூபுரகங்கை" எனக் கொண்டாடுகிறார்கள்.

ராக்காயி அம்மன்

சித்திரைத் திருவிழா

நூபுரகங்கையில் நீராடி சுதபாஸ் என்ற முனிவர் மெய்மறந்திருந்த வேளையில் துர்வாச முனிவர் வந்தபோது, அவரைக் கண்டு கொள்ளாமல் இருந்ததால் துர்வாசர் அவரை மண்டூகமாகுமாறு (தவளையாகி) சபித்தார். பின்னர் மண்டூக மகரிஷி சாப விமோசனம் நல்குமாறு வேண்ட வராக பருவத்தில் 12 ஆண்டுகள் தங்கி வழிபட்டால் ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாள் வந்து அனுக்கிரகம் நல்குவார் எனக் கூறியதால் 12 வருடங்கள் தங்கி அழகரால் சாப விமோசனம் பெற்றார். இது இப்போதும் ஒவ்வொரு ஆண்டும் அழகர் வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சிக்குப் பின்னர் மதுரை வண்டியூர் கிராமத்தில் தொடர்ந்து நடந்து வருகிறது.

ராக்காயி அம்மன்.

இந்த மலையில் சப்த கன்னிகைகள் மற்றும் அநேக தெய்வப் பெண்டிர்கள் குடிகொண்டிருந்த போதிலும் "ராக்காயி அம்மன்" என்கிற பெண் தெய்வம் இந்தத் தீர்த்தத்துக்குக் காவலாக இருந்து வருகிறது.

தலையருவி உத்ஸவம்

இங்கு ஐப்பசி மாதம் சுக்லதுவாதசியன்று

கள்ளழகர், மலைமீது வந்து வாசனாதி தைலங்களைச் சாற்றிக் கொண்டு நூபுரகங்கையில் திருமஞ்சனம் செய்வது மிகச் சிறப்பாக வாய்ந்த உத்ஸவம் ஆகும். இப்போது இவ்விழா "தைலக்காப்பு உத்ஸவம்" "தொட்டி உத்ஸவம்" "டோலோத்ஸவம்" என்கிற பெயரோடு விளங்குகிறது. இதுவே பாண்டிய மன்னர்கள் காலத்தில் "தலையருவி உத்ஸவம்" என்று கொண்டாடப்பட்டுள்ளது. இங்கு இந்த உத்ஸவத்தில் பெருமாளைத் தைலக்காப்பில் சேவித்தும், திருமஞ்சனம் ஆனபிறகும் சேவிக்கும் பொழுது

"கட்டுரைக்கில் தாமரை நின் கண்பாதம்
கையொவ்வா
சுட்டுரைத்த நன்பொன் உன்திருமேனியொளி
யொவ்வாது
ஒட்டுரைத்து இவ்வுலகு உன்னைப் புகழுவெல்லாம்
பெரும்பாலும்
பட்டுரையாய்ப் புற்கென்றெ காட்டுமால்
பரஞ்சோதீ"

என்று இந்தத் தீர்த்தினை ஆழ்வார்கள் பாசுரம் பாடி அழைக்கிறார்கள்.

திருத்தலத்தின் மகிமை:-

அழகருடைய திருமஞ்சனத்திற்கு மட்டும் தினந்தோறும் 3மைல் தூரம் நடைப்பயணமாக சென்று எடுத்து வரும் தீர்த்தத்தை 18ஆம்படி கருப்பண்ணசாமி கோயிலில் வைத்துப் பிறகு யானை கொட்டு மேளத்துடன் பெருமாள் அபிஷேகத்திற்கு பயன்படுத்தப்படும்.





அருள்மிகு கள்ளழகர்

ஒவ்வொரு ஆண்டும் அமாவாசையன்று நூபுரகங்கையில் ஏழு நிறங்களில் தீர்த்தம் வருவது வழக்கம் . அந்த நேரத்தில் நீராடுபவர்கள் நோய் இன்றி வாழ்வர் என்பதும் ஒரு மகிமை.

தீராத நோய்களுக்கு இந்தத் தீர்த்தம் மாமருந்தாகும். தினந்தோறும் மூன்று நாள் இரண்டு வேளை நீராடி வந்தால் மஞ்சள்காமாலை நோய் வராது.

எனவே அனைவரும் இந்தத் தீர்த்தத்தில் நீராடி மகிழ்ந்து "வள்ளல் மாலிருஞ்சோலை மணாளராம்" கள்ளழகரது திருவருளைப் பெற வேண்டுகிறோம். ★★★

முருகருக்குச் சாதி உண்டா?

முருகனின் தந்தை மலையாளி (கயிலைமலையாளி)
முருகனின் தாய்மாமன் மாட்டிடையன்
(ஆநிரை மேய்த்தவர்)
முருகனின் மைத்துனன் வாணியன் (வாணியை
மணந்த பிரம்மன் என்பது பொருள்)
ஆகவே முருகருக்குச் சாதி ஏது எனக் கேட்கிறார்.
கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

"தந்தை மலையாளி தாய்மாமன் மாட்டிடையன்
வந்த ஒரு மச்சானும் வாணியனே - சந்ததமும்
விண்முகத்தை எட்டும் அயில்வேலேந்து
பன்னிருகைச்
சண்முகற்குச் சாதி எது தான்?"

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் : திருமிகு ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையஆட்சித்துறை, சென்னை - 600 034.தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் : கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
அச்சிடுவோர் : இராயப்பேட்டை எழுதுபொருள் அச்சு மற்றும் உபபொருள்கள் உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடெட். சென்னை-14. தொலைபேசி எண் : 28485670

With best compliments from :

AN. SUBBIAH, B.E.,
INDIA FABRICATORS
R.S. No. : 262 / 4-A, Thattankulam, Madurai-107.
PRESS METAL COMPONENTS MANUFACTURER

பதிவு எண் : TN / PMG (CCR) / 707 / 03-05 / WPP No. 451 / 03-05

With best compliments from

SARATHA'S - TRICHY

(Creator of Tomorrows fashions today)

This is the time to Visit "SARATHAS" at Trichy and Chennai for the latest designs and Combination in Silk Kancheepuram and Dharmavaram, Banaras Silk Sarees. Cotton, Polyester, Handloom Saree, Suiting, Shirting, Fabrics and each in fabulous ranges.

Trichy
Gram "Super Silk"
45, N.S.B. Road, Trichy - 620 002.
Phone : 2702077

Chennai
827, Dhun Building
Anna Salai, Chennai - 600 002
Phone : 28521177